சைவ சமயம்

# உலகப் பொதுச் சமயம்

ஆசிரியர்

தமிழ்ப் பெரும்புலவர், கணியர், டாக்டர்

**இ. மு. சுப்பிரமணிய பிள்ளை,**

அமைச்சர், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்.

GF
R673x1:g
H8

1948

# சைவசமயம்
# உலகப் பொதுச் சமயம்.

★

ஆசிரியர் :
தமிழ்ப் பெரும்புலவர், கணியர், டாக்டர்
**இ. மு. சுப்பிரமணிய பிள்ளை,**
அமைச்சர், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்,
சங்கரநயினார்கோவில்.

★

பதிப்பாளர் :
**S. S. பிள்ளை,**
உரிமையாளர்,
கணேசன் அச்சகம், திருநெல்வேலி.

★

1948.

[விலை அணா 4

# பொருள் அடக்கம்.


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை, அணிந்துரை, முகவுரை ... | முகப்பு |
| 2. | தோற்றுவாய் ... ... | 1—7 |
| 3 | புறச்சமயங்களும், சைவமும் ... | 8—13 |
| 4 | ஆணும் பெண்ணும் ... ... | 14—19 |
| 5. | சாதி வேறுபாடு ... ... | 20—26 |
| 6. | சமய நுழைவு ... ... | 27—29 |
| 7. | புறவேடம் ... ... | 30—31 |
| 8 | புலால் மறுத்தல் ... ... | 32—34 |
| 9. | வீட்டு நெறி ... ... | 35—42 |
| 10. | முடிவுரை ... ... | 43—46 |
| 11. | புகழ்மாலை ... ... | 47—55 |

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 14 | 14 | உயர்களின் | உயிர்களின் |
| 15 | 13 | சத்திபைச் | சத்தியைச் |
| 16 | 25 | ஏன் | என் |
| 42 | 3 | அதுவும் | இலையும் |
| 43 | 15 | சைவத்தின் | சைவசமயத்தின் |

பெரியார் காட்டும் பொருள், திருத்தங்கள் அடுத்த பதிப்பில் நன்றியுடன் சேர்க்கப்பெறும்.

# முன்னுரை.

தமிழ்ப் பேராசிரியர், திருவாளர்

**இரா. பி. சேதுப்பிள்ளை,** பி. ஏ., பி. எல்.,

அவர்கள்,

தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர்,

சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை. **18—10—1948.**

*சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் நல்லமைச்சர், டாக்டர் இ. மு. சுப்பிரமணியபிள்ளையவர்களை நாடறியும். அவர்கள் எழுதியுள்ள 'சைவ சமயம் உலகப் பொதுச் சமயம்" என்ற நூல் சிவநெறியின் செம்மையை எடுத்துரைக்கின்றது. சிவநெறி என்பது பொது நெறி. அந்நெறியிலே பிறப்பு வேற்றுமை யில்லை; ஆண் பெண் என்ற வேற்றுமை யில்லை; இவர் தேவர், அவர் தேவர் என்ற மயக்கமில்லை; "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்பது அதன் கொள்கை. இவற்றை யெல்லாம் காலத்திற்கேற்ற முறையில், எல்லோர்க்கும் விளங்கும்படியான இனிய நடையில் எழுதி உதவிய பிள்ளையவர்களுக்குத் தமிழகத்தார் நன்றி உரியதாகுக.*

**ரா. பி. சேதுப்பிள்ளை.**

# அணிந்துரை.

---

தமிழ்ப்பேராசிரியர், திருவாளர்
**டாக்டர் அ. சிதம்பரநாதச்செட்டியார்** எம். ஏ.,
அவர்கள்,
துணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலைநகர். **28—9—1948.**

*திருவாளர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்களால் எழுதப் பெற்ற "சைவ சமயம்—உலகப் பொதுச்சமயம்" என்ற நூலைப் படித்து மகிழ்ந்தேன். சைவ சமயத்தின் உண்மை நிலையினை எல்லாரும் தெளிவாகத் தெரிந்து கொண்டு வழுவற்ற சமய வழி பாட்டில் ஒழுகும் முறையினை இந்நூல் தெளிவாக அறிவுறுத்து கின்றது. எல்லாச் சமயங்களையும் தன் அங்கங்களாகத் தழுவிக் கொண்டு நாடு, மொழி, குலம், செல்வம், வறுமை முதலிய வேறு பாடுகளை நோக்காது எல்லா வுயிர்களையும் இறைவன் திருவருள் நெறியிற் செலுத்த வல்ல உலகப் பொதுச் சமயம் சைவ சமயம் என்பதனை இந்நூலில் ஆசிரியர் மிகத்தெளிவாக விளக்குகிறார். சாதி, மதம், கட்சி முதலியவற்றால் முரண்படுவார் அனைவரையும் ஒன்றுபடுத்தும் முறையில் எழுதப்பெற்ற இதனைத் தமிழரனை வரும் போற்றிப் பயன்பெறுவர் என நம்புகிறேன்.*

**அ. சிதம்பரநாதன்.**

நீதிபதி, திருவாளர்

## மாதவையர் அனந்தநாராயணன், I. C. S., அவர்கள்,

திருநெல்வேலி. 5—11—1948.

"சைவசமயம் உலகப் பொதுச்சமயம்" என்ற தலைப்புடன் தமிழ் வித்துவான் திரு இ. மு சுப்பிரமணியபிள்ளை அவர்கள் இயற்றிய சிறு நூல் தமிழ் நாட்டு மக்கள் அனைவராலும் போற்றுதற்குரியது. யாவரும் தமது தமது மதக் கோட்பாடுகளைச் சிறப்பித்துக் கூறல் இயல்பெனலாம். ஆயின், இந்தச் சிறு நூல் இவ்வாறான கேவலம் சமயப்பற்றுடனும் சித்தாந்த விளக்கத்துடனும் அடங்குவதன்று. உலகின்கண் மாந்தர் தொழும் தெய்வங்கள் பலவாயினும் "மணிகளில் சரடென" இம் மூர்த்திகளில் ஊடுருவி நிற்கும் பரம்பொருள் ஒன்றே. அவ்வாறே, பல கிளைகளான மதங்களின் ஆணிவேரெனும் உண்மையும் ஒன்றே. இந்த உண்மையைத் திரட்டிக்கூறும் இச் சிறு நூல் சமய நூலன்று. இதில் விளக்கப்பட்டுள்ள சைவம் பலரும் 'தாயகம்' என்று போற்றக்கூடிய விரிவுடையதாய், சாதி, புறச்சின்ன நெறி வேற்றுமைகளைக் கடந்து ஒளி வீசுகின்றது.

ஆசிரியரின் பரந்த நோக்கமும் அன்பும் மிக, மிக மெச்சுதற்குரியன. பகை பலவகையில் பெருகும் இந் நாட்களில், இந்த ஆசிரியர் 'சமயநுழைவு' என்ற அத்தியாயத்தில், தீக்கையைக் குறித்துக் காட்டியிருக்கும் மனவிரிவையும், ஒற்றுமைப் பான்மையையும் பிறமதத்தினரும் பின்பற்றினால், நமது நாட்டில் சமயப்பகைகள் அன்றே ஒழியும்.

**மா. அனந்தநாராயணன்.**

# முகவுரை

சைவசமயம் ஒன்றே உலகப் பொதுச்சமயம் ஆவதற்கு ஏற்றது என்பதை இந்நூலில் சுருக்கமாக ஒருவாறு விளக்கியிருக்கிறேன்; வேறு தக்க கருத்துக்கள் இருந்தால் அடியேனுக்குத் தெரிவித்தருளும்படி புலவர்களை வேண்டிக்கொள்ளுகின்றேன்.

உலகம் எங்கும் பொதுச்சமயமாகப் பரவி மெய்யான இன்பத்தை விளக்கவல்ல சைவசமயத்தின் கொள்கைகள் சரியானபடி எடுத்துச் சொல்லப்பெறாமையால் இன்று சைவம் குடத்துக்குள் வைத்த விளக்குப்போல இருக்கிறது. அதனால் நாளுக்குநாள் குறைந்துகொண்டுவருகிற சைவ சமயத்தின் உண்மையான கொள்கைகளை உலகம் அறியச் செய்வதுடன் அவைகளை யாவரும் நடைமுறையிற் கொண்டுவந்து மெய் இன்பம் அடையச் செய்யவேண்டும் என்பதே அடியேன் இந்நூலை எழுதிய நோக்கம்.

முன்னுரை அருளிய திருவாளர் பேராசிரியர் இரா. பி. சேதுப்பிள்ளையவர்களுக்கும், அணிந்துரை வழங்கிய திருவாளர் துணைவேந்தர் அ. சிதம்பரநாதச்செட்டியார் அவர்களுக்கும், நீதிபதி திருவாளர் மாதவையர் அனந்தநாராயணன் அவர்களுக்கும் என்றும் நன்றியுடையேன். இதனை அன்புடன் அச்சிட்டுதவும் அன்பர் திருவாளர் சு. சுடலைமுத்துப்பிள்ளையவர்கள் நன்றி மறக்க முடியாதது. உலகம் இந்நூலை ஏற்று ஆதரித்தருளுவதாக.

தி. மு. சுப்பிரமணியபிள்ளை

25—10—1948.

ஓம்

# சைவ சமயம் உலகப் பொதுச் சமயம்.

## தோற்றுவாய்.

உலகத்தில் காணப்படும் சமயங்கள் எண்ணிறந்தன. அவை சைவம், வைணவம், பௌத்தம், கிறிஸ்தவம், முகம்மதீயம், ஆருகதம், சாக்தேயம், காணபத்தியம், கௌமாரம், மாயாவாதம், உலோகாயதம், சுமார்த்தம், பிரமசமாசம், ஆரியசமாசம் முதலியன. அவைகளில் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக்கொண்டு வழிபடுகின்ற சமயம் சைவம். விட்டுணுவை வழிபடுவது வைணவம். சத்தியை வழிபடுவது சாத்தேயம். கணபதியை வணங்குவது காணபத்தியம். குமாரனை வழிபடு கடவுளாகப் போற்றுவது கௌமாரம். இவ்வைந்தும் வழிபடு கடவுளர் பெயரால் தோன்றியன. சுமிருதி நூல்களை ஆதாரமாகக்கொண்டு தோன்றியது சுமார்த்தம். கௌதம புத்தரால் பௌத்தமும், ஏசுகிறிஸ்துநாதரால் கிறிஸ்தவமும், முகம்மது நபிநாயகத்தால் முகம்மதீயமும், மாவீரர் என்ற அருகமுனிவரால் ஆருகதமும் தோற்றுவிக்கப் பட்டன. பிரமசமாசமும், ஆரியசமாசமும் அண்மையில் இரு பெரியோரால் அமைக்கப் பெற்றனவே. எல்லாம் மாயை என வாதிப்பது மாயாவாதம். உலகமே உள் பொருள் என வாதிப்பது உலோகாயதம்.

இவை தம்முள் கிறிஸ்தவமும் முகம்மதியமும் நீங்கலாக ஏனைய சமயங்களெல்லாம் இந்தியாவில் தோன்றியனவே. ஒருகாலத்தில் ஆருகதம் தமிழ்நாடு முழுவதும் பரவியிருந்தது. பௌத்தம் இந்தியாவின் பெரும் பகுதியில் பரவியிருந்ததேனும் இப்போது மிகவும் அருகி விட்டது; ஆனால் அது சப்பான், சீனம், திபெத்து ஆகிய நாடுகளில் முழுவதும் பரவி விளங்குகின்றது. ஏனைய காணாபத்தியம், சாத்தேயம், கௌமாரம், ஆருகதம் முதலியன மிக அருகிவிட்டன. மாயாவாதம் மலிந்து நிற்பதே சுமார்த்தம். கிறிஸ்தவமும் முகம்மதியமும் நடு ஆசியாவில் தோன்றியன. கிறிஸ்தவம் உலகில் பெரும்பகுதியினரால் கைக்கொள்ளப்பெற்று இன்றும் பரவிவருகின்றது. முகம்மதியம் அரேபியா, எகிப்து, பாரசீகம், உருசியாவின் தென்பகுதி, ஆப்கானிஸ்தானம் முதலிய இடங்களில் பரவியிருப்பதோடு இந்தியாவிலும் வளர்ந்து வருகிறது. இந்தியா முகம்மதியத்தாலும் கிறிஸ்துவத்தாலும் விரைவில் விழுங்கப்படுமோ என அறிஞர் அஞ்சும் நிலை இப்போது தோன்றியுள்ளது. இவ்வித அச்சத்தால் சில ஆண்டுகளின் முன் தோன்றியனவே பிரமசமாசமும் ஆரியசமாசமும்.

மேலே கூறிய சமயங்களில் முதன்மைபெற்று விளங்குவன சைவம், வைணவம், பௌத்தம், கிறிஸ்தவம், முகம்மதியம், சுமார்த்தம் என்பன. இவை தம்முள் **உலக சமயம்** எனப்போற்றி உலகினர் அனைவராலும் கைக்கொள்ளத்தகுந்த கொள்கைகளை உடையது யாது? அது சைவ சமயமே இவ்வாராய்ச்சியே நம்முன் நிற்பது.

சமயம் என்பது யாது? 'அது எனக்கு இன்னதென அறியமுடியவில்லை' என ஓர் அறிஞர்கூறுகிருர். ஒழுக்கங்களின் அமைப்பே சமயம் எனச் சிலர் கூறுகின்றனர். "கடவுளிடத்திலிருந்து பிரிந்துவந்த உயிர்கள் அவரைக் கூடுமாறு கூறுவதே சமயம்" என உருசியப்பேரறிஞர் இடால்ஃச்டாய் கூறுகின்ருர். "ஒரு வழிப்பட்ட ஒழுக்கங்களையும் கோட்பாடுகளையும் ஏற்படுத்தி அவைகளை உலகினர் அனைவரும் கொண்டுநடக்கும்படிசெய்து அதனால் உலகினர் அனைவருள்ளும் அன்பும் ஒற்றுமையும் உண்டாகும் படிசெய்வது தான் சமயம்" எனச் சிலர் செப்புகின்றனர். இது உண்மையே ஆயினும் சில நுண்ணறிவாளர் "சமயம் வேறு பாட்டை உண்டுபண்ணி மக்களிடைத் துன்பத்தைப் பரப்புவது" என மொழிவாராயினர். அவர் பின்வருமாறு தமது கொள்கைக்குக் காரணம் விரிக்கின்றனர்:

" மக்களிடைக்காணும் துன்பங்களுக்குக் காரணம் அவர்கள்பால் விளைந்த வேற்றுமை எனவும், வேற்றுமைக்குக் காரணம் பொறுமையின்மை எனவும், கண்ட தலைவர் பலர் பொறுமையும் ஒற்றுமையும் நிலைபெறுமாறு சில கொள்கைகளைப் பரவச்செய்வாராயினர். அவைகளே சமயங்களாய், தாம் தோன்றிய உண்மைநோக்கம் நாளடைவில் அழிந்து பகைமைக்குக் காரணமான தடைகளாய் நின்று சச்சரவுகளை விளைத்து வருகின்றன. அவை தம்முள் முதன்மையாயின ஆருகதம், பௌத்தம், மூகம்பதீயம், கிறிஃச்தவம், ஆரியசமாசம் முதலியன. ஆருகத மதத்தார் திருஞானசம்பந்தர் இருந்த திருமடத்தில் தீ மூட்டினர்; திருநாவுக்கரசரை நீற்றறையிலிட்டு நஞ்சுஊட்டிக் கல்லினைக் கட்டிக் கடலினும் தள்ளினர்; பிறமதத்தினரைக் காண

லும் முட்டு, அவர் வரவு கேட்டலும் முட்டு என அவ்வளவு கொடுமையாளர் ஆயினர். பௌத்தரும் அன்னரே. முகம்மதியர் செய்த கொடுமைகளைக்கண்டு மனம்பொறாத கிறிஸ்தவர்கள் பாலஸ்தீனத்தில் பன்னெடுங் காலமாகப் போர் புரிந்தார்கள். ஆங்கில அரசனும் சிங்கமனத்தன் இரிச்சர்டு போன்ற அரசர் பலரும் அப்பெரும் போரில் நேரில் கலந்துகொண்டார்கள். கிறிஸ்தவருள் உரோமன் கதோலிக்கருக்கும் புரோடெஸ்டாண்டியருக்கும் விளைந்த சச்சரவுகளுக்கு அளவே இல்லை; உரோமன் கத்தோலிக்க அரசருக்கும் அவரல்லாத அரசருக்கும் ஐரோப்பாவில் அடிக்கடி போப்பு என்ற மதகுருவின் தூண்டுதலால் போர் விளைந்து வந்தது. இக்காலத்தில் இந்தியாவில் இந்துக்களுக்கும் முகம்மதியருக்கும் விளைகின்ற கொலைகளுக்கும் கலகங்களுக்கும் எண்ணுண்டோ? இந்து முகம்மதிய ஒற்றுமை காணுமாறு தலைவர்கள் செய்யும் முயற்சிகள் வீணாகின்றன அன்றோ?."

"ஆனால், சமயந்தான் யாதோ?" என இக்கால அறிஞர் சிலர்கூடி ஆராய்ந்து "அவர் அவர் அறிவை வளர்த்து அவர் அவரைத் தனித்தனி இன்பம் அடையுமாறு அமைந்திருப்பதே சமயம்" என முடிவுகட்டியிருக்கின்றனர். இம்முடிவு உண்மையானதே.

உலகில் வாழும் மக்கள் அனைவரும் விரும்புவது இன்பமே. தோற்றம் உடைய உலக இன்பம் நிலைபெற்றதாக இல்லாமல் விரைந்து அழியும் தன்மையதாக இருத்தலினாலே அவர்கள் நிலைபெற்ற பேரின்பத்தைப்பெறும் வழியைக்காண முயல்வார் ஆயினர். அவ்வாறு முயலும் வழியே

சமயம் எனப்படும். முயலும் மக்களது அறிவு வெவ்வேறு நிலைமையதாக இருத்தலின் அவர்கள் காணும் வழிகளும் வேறுவேறாகவே இருக்கும். ஆதலின் அவருள் ஒருவர் சொன்னபடி மற்றொருவர் கூறுவது இல்லை. இதனையே **தாயுமானப் பெருந்தகையார்** தமது திருபாடலில் அழகாக ஓதுகின்றனர். அது பின்வருமாறு:-

"பூதலயம் ஆகின்ற மாயைமுதல் என்பர்சிலர்,
பொறிபுலன் அடங்கும் இடமே
பொருள்என்பர் சிலர், கரண முடிவு என்பர் சிலர், குணம்
போனஇடம் என்பர் சிலபேர்,
நாதவடிவு என்பர்சிலர், விந்துமயம் என்பர்சிலர்,
நட்டநடு வேஇருந்த
நாம்என்பர் சிலர்,உருவம் ஆம்என்பர் சிலர்,கருதி
நாடில்அரு என்பர் சிலபேர்,
பேதம்அற உயிர்கெட்ட நிலயம்என் றிடுவர்சிலர்,
பேசின்அருள் என்பர் சிலபேர்,
பின்னும்முன் னும்கெட்ட சூனியமது என்பர்சிலர்,
பிறவுமே மொழிவர்; இவையால்
பாதரசம் ஆய்மனது சஞ்சலப் படும்அலால்
பரமசுக நிட்டை பெறுமோ?
பார்க்கும்இடம் எங்கும்ஒரு நீக்கம்அற நிறைகின்ற
பரிபூர ணானந் தமே"

சிவஞானசித்தியார் இதனையே,

"ஓதுசமயங்கள்பொருள் உணரும் நூல்கள்
ஒன்றோடு ஒன்று ஒவ்வாமல் உளபலவும்" — எனக் கூறு கின்றது. அந்நூல் இத்துடன் அமையாது, "இவற்றுள்

யாது சமயம்? பொருள்நூல் யாது இங்கு?" என்னும் வினாவை எழுப்பிக்கொண்டு,

"இதுஆகும் அதுஅல்லது எனும்பிணக்கது இன்றி
நீதியினால் இவையெல்லாம் ஓர்இடத்தே காண
நின்றதியா தொருசமயம் அதுசமயம், பொருள்நூல்"

எனப் புகன்று 'எச்சமயம் ஏனைய சமயங்களை யெல்லாம் தழுவிக்கொண்டு அவை கூறும் மெய்ப்பொருள்களைத் தன் அகத்தே அடக்கிக்கொண்டிருக்குமோ அதுவே சமய மாம்" என்ற உண்மையை நிலைநாட்டுகின்றது. இங்ஙன மாகிய பெருநிலையை உடையது சைவசமயமே. இதனையே மிகவிரிவாகத் தாயுமான முனிவர்,

"செப்பரிய சமயநெறி எல்லாம் தம்தம்
தெய்வமே தெய்வம்எனும்; செயற்கைஆன
அப்பரி சாளரும்அஃதே பிடித்துஆ லிப்பால்
அடுத்தஅந் நூல் களைநம்விரித்தே அனுமானாதி
ஒப்பவிரித்து உரைப்பர் இங்ஙன் பொய்மெய் என்ன
ஒன்றிலைஒன்று எனப்பார்ப்பது ஒவ்வாது ஆர்க்கும்;
இப்பரிசாம் சமயமுமாய் அல்ல ஆகி
யாதுசம யமும்வணங்கும் இயல்ப தாகி
இயல்புஎன்றும் திரியாமல் இயமம் ஆதி
எண்குணமும் காட்டிஅன்பால் இன்பம் ஆகிப்
பயன்அருளப் பொருள்கள்பரி வாரம் ஆகிப்
பண்புறவும் சௌபான பக்கம் காட்டி
மயல்அறுமந் திரம்சிட்சை சோதி டாதி
மற்றங்க நூல்வணங்க மௌன மோலி

அயர்வறச்சென் னியில்வைத்து ராசாங் கத்தில்
அமர்ந்தது வைதிகசைவம், அழகிது அந்தோ!
அந்தோ! ஈது அதிசயம்இச் சமயம் போல்இன்று
அறிஞர்எல்லாம் நடுஅறிய அணிமா ஆதி
வந்துஆடித் திரிபவர்க்கும், பேசா மோனம்
வைத்திருந்த மாதவர்க்கும், மற்றும் மற்றும்
இந்திராதி போகநலம் பெற்ற பேர்க்கும்
இதுஅன்றித் தாயகம்வேறு இல்லை இல்லை
சந்தான கற்பகம்போல் அருளைக் காட்டத்
தக்கநெறி இந்நெறியே தான்சன் மார்க்கம்."

என மூன்று திருப்பாடல்களால் விளங்க ஓதி யருளினார். ஒரு சமயம் உலக சமயம்ஆவதற்கு அது ஏனைய சமயங்களை யெல்லாம் தன் அங்கங்களாகத் தழுவிக்கொள்ளுதலோடு அதன்கண் ஆணுக்கும் பெண்ணுக்கும், கிழவருக்கும் குமாருக்கும், செல்வருக்கும் வறியருக்கும் இருக்கும் வேறுபாடுகள் பயன்பெறுவதில் பாராட்டாமல் இருத்தல் வேண்டும் பலவகைப்பட்ட நிலையினருக்கும் அதில் இடம் அமைதல்வேண்டும். இம்முறையில் இவ்ஆராய்ச்சியை க. புறச்சமயங்களும் சைவமும், உ. ஆணும் பெண்ணும், ங. சாதி வேறுபாடு, ச. சமயநுழைவு, ரு. புறவேடம், சா. புலால்மறுத்தல், எ வீட்டுநெறி என்ற தலைப்புக் களாகப் பிரித்துச் சுருக்கமாக ஆராய்வோம்.

## க. புறச்சமயங்களும், சைவமும்

உலகம்தோன்றிய காலத்தில் மக்கள் இக்காலத்தில் வாழ்வதுபோல உயர்ந்த நாகரிக வாழ்க்கையில் நின்றார் அல்லர். அவர்கள் உடை அணியவேண்டும் என்ற உணர்ச்சி கூட இல்லாமல் ஆணும்பெண்ணும் ஆக மாக்கள் அலைவது போலவே அலைந்து திரிந்தனர். அவர்கள் தமது உணவை வெந்து பக்குவப்படுத்தி உண்ணும்ஆறும் அறியார். அவர்களுடைய உலகப்பழக்கமும் அறிவும் வளரவளரவே அவர்கள் உடையிலும் உணவிலும் படிப்படியாக நாகரிகம் பெற்றனர்.

ஆதிகால மக்கள் அச்சம் தரும் பொருள்களாகிய தீ, இடி, காற்று, நீர் முதலிய பொருள்களைக் கண்டு அஞ்சி அவைகளைத் தமது தெய்வமாக வழிபட்டு வந்தனர்; ஞாயிற்றையும், திங்களையும் தெய்வம்என நம்பிப் பூசித்தனர். அவர்கள் தமது சிறுதெய்வங்களுக்குத் தாம் உண்ணும் உணவுப்பொருள்களாகிய மிருகங்களை வெட்டிப் பலி யிட்டு வருவாராயினர். உலகில் தலைசிறந்த நாகரிகம்உடையவர்களாகக் கருதப்பெறும் இந்தியரும், கிரேக்கரும், எகிப்தியரும், கால்திநேவியரும், உரோமானியரும் சிறு தெய்வ வழிபாட்டினரே. பல காலம் கழிந்தபின் பின் அவர்கள் அறிவு வளர்ந்து ஒன்றே தெய்வம் என்ற நம்பிக்கையைப்பெற்றுத் தமது பழைய சிறுதெய்வ வழிபாடுகளை விடத்தொடங்கினர். இங்ஙனமாக அறிவு வளர்ந்து வளர்ந்து தெளிந்த உயரிய கொள்கைகளையுடைய சமயமே சைவ சமயம்.

சைவசமயம் தமிழ் மக்களிடைத் தோன்றியது. தமிழ்ப்புலமை மிக்க டாக்டர் சி. யூ. போப்பையரவர்கள் "தமிழ் மக்களது உயர்ந்த அறிவாராய்ச்சியின் விளைவே சைவ சித்தாந்தம்" (Saiva Sidhantha is the choicest product of the Dravidian intellect) என்று கூறுகின்றார். உலகில் முதன்முதல் உயிர்கள் தோன்றிய இடமாகிய லெமூரியாவில் (கடல் கொள்ளப்பட்ட இடம் — லெமூரியா) இருந்த மக்கள் பேசிய மொழி தமிழ். அம் மக்களே உலகம் எங்கணும் பரந்து குடியேறினர் என்பது அறிஞர் முடிபு; ஆகையால் அவர்கள் பேசிய தமிழ்தான் உலகத் தாய்மொழி என்று துணிந்து கூறலாம். உலகத் தாய்மொழியாம் தமிழ் பேசிய மக்களது ஒழுக்கத்தை விரித்து உரைக்கும் திருக்குறள் என்ற தெய்வ நூலை இப்போது உலகினர் அனைவரும், சமய சாதிப் பிணக்கு இல்லாமல், தமது ஒழுக்க நூலாக ஏற்றுக்கொள்வாராயினர். அங்ஙனமே உலக மொழியாம் தமிழில் தோன்றிய முதன்மைச் சைவசித்தாந்தமும் உலக சமயமாகவே இருக்கும் என்பது சொல்லாமலே விளங்கும். அதனையே தெளிக்க எழுந்தது இவ் ஆராய்ச்சி.

வகுப்புக்களில் முதல், இரண்டு, மூன்று முதலியவைகளில் படிந்தே தலைமை வகுப்பிற்கு ஒருவன் வருதல் கூடும். முதல் இரண்டு முதலிய வகுப்புக்கள் தலைமை வகுப்பில் அடங்கும்; அவைகளில் கற்பார் தலைமை வகுப்பின் தன்மைகளை உணரார். தலைமை வகுப்பு முதல், இரண்டு முதலிய கீழ் வகுப்புக்களில் அடங்காது; அதனை அடைந்தார் முதல் இரண்டு முதலிய வகுப்புக்களில்

படித்து முதிர்ந்த தம் நிலையை விவரமாக உணர்வர், முதல் இரண்டு முதலியவற்றில் படியாமல் தலைமை வகுப்பை அடைதல் முடியாது. இங்ஙனமே ஏனைய சமயங்கள் எல்லாம் சைவத்தை அடைவதற்குப் படிகள். அவைகளில் நின்று தேறியே சைவத்திறத்தை எய்த முடியும் இதனைச் சிவஞான சித்தியார்

"புறச்சமய நெறிநின்றும், அகச்சமயம் புக்கும்,
புகல்மிருதி வழிஉழன்றும், புகலும்ஆச் சிரம
அறத்துறைகள் அவை அடைந்தும், அருந்தவங்கள் புரிந்தும்,
அரும்கலைகள் பலதெரிந்தும், ஆரணங்கள் படித்தும்,
சிறப்புஉடைய புராணங்கள் உணர்ந்தும், வேதச்
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ், சென்றால் சைவத்
திறத்துஅடைவர். இதில் சரியை, கிரியா, யோகம
செலுத்தியபின் ஞானத்தால் சிவன்அடியைச் சேர்வர்".

எனக் கூறுகின்றது.

உயிர்களெல்லாம் துன்பம் நீங்கி இன்பம்பெற வேண்டும் என்று ஆசைப்படுகின்றன. வீட்டு இன்பத்தை மறுக்கின்ற உலோகாயதரும உலக இன்பமாகிய சிற்றின்பத்தைத் தமது முடிவான கொள்கையாக உடையர். சைவ சமயம் துன்ப நீக்கமும் பேரின்பப்பேறுமே தனது முடிந்த கொள்கையாக உடையதோடு உலக இன்பப்பேறு தருவதாகிய இல்லற வாழ்க்கையையும் பேரின்பப் பேற்றிற்கு உரியவழியாக உடையது.

இரண்டொரு சமயங்களைத் தவிர ஏனைய சமயங்கள் எல்லாம் " கடவுள் ஒருவர் உண்டு, உயிர்கள் அவருக்கு

அடிமைகள், அவை தம்மையும் கடவுளையும் அறிய ஒட்டாமல் அறியாமையாகிய பாசம் மறைக்கிறது, கடவுள் அருளால் பாசம் நீங்கிப் பெருவாழ்வு அடைவதே வீடு அடைதல்'', எனக் கூறுகின்றன. இவைகளைச் சைவ சமயம் ஒப்புக்கொள்கிறது. "உயிர் பிறப்பு இறப்பு உடையது. கடவுள் தோற்றமும் ஈறும் அற்றது. உயிர்க்குணம் இன்மையே கடவுளின் தன்மை'' எனச் சைவம் ஒன்றே கூறுகின்றது. வைணவம் திருமாலுக்குப் பத்துப் பிறப்புக்களைக் கூறி அவரைக் கடவுள் என நாட்டுகிறது. இந்நிலையில் அது நின்றுவிட்டது. பிறசமயங்கள் சில சில தத்துவங்களையே கூற, வைணவம் இருபத்துநான்கு தத்துவங்களைக் கூறுகிறது. ஆனால் சைவமோ முப்பத்தாறு தத்துவங்களைக்கூறி ஏனைய சமயங்களைத் தன் சோபான மார்க்கங்களாகத் தழுவி அரசாங்கத்து அமருகின்றது. பரசிவமோ முப்பத்தாறு தத்துவங்களுக்கும் அப்பாற்பட்டது எனச் சைவம் எடுத்துக் காட்டுகிறது.

சாங்கிய சமயத்தினர் உலகிற்கு முதற்காரணமாக மூலப்பகுதியைக் கூறுகின்றனர். சைவம் அதனை ஒப்புக்கொள்வதோடு அதன்மேலும் அசுத்தமாயையும் சுத்தமாயையும் கூறுகின்றது. அறநெறி நிற்றலே சிறந்த வாழ்வு எனக்கூறும் பௌத்தம். தவநெறியே வீடுதரும் என ஆருகதம் மொழியும் ஞானத்தை இகழ்ந்து கருமத்தை நிலைநாட்டும் மீமாஞ்சம். கருமத்தை இகழ்ந்து ஞானத்தைப் போற்றும் மாயாவாதம். இவைகளில் ஒன்றையேனும் மறுக்காமல் அனைத்தையும் ஒப்புக்கொள்ளுவதோடு சைவசமயம் இவைகளுக்கு மேம்பட்ட திருவருளையும் துணையாகக் கொள்கிறது. வீடுபேற்றுக்குப்

படிகளாக அவ்அவர் அறிவு நிலைக்கு ஏற்பச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கையும் வற்புறுத்து கின்றதோடு அவ்வந்நிலைமைக்கு ஏற்ற பயனையும் நியமிக் கின்றது சைவம்.

ஒழுக்கமே சிறந்தது என விதிக்கும் பௌத்த மதக் கொள்கையையும் சைவம் உடன்படுகின்றது. ஏனையசமயங் களும் ஒழுக்கத்தை உயிரினும் ஓம்பவேண்டும் என்றே விதிக்கின்றன. சிவஞான சித்தியார் இரண்டாம் சூத்திரத் தில் (செய்யுள் 23)

"ஒழுக்கம்அன்பு அருள்ஆசாரம் உபசாரம் உறவுசீலம்
வழுக்கு இலாத் தவம்தா னங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்குஇலாத் துறவுஅடக்கம் அறிவொடுஅர்ச் சித்தல் ஆதி
இழுக்கு இலா அறங்கள் ஆனல் இரங்குவான் பணி அறங்கள்"

எனக்கூறுகின்றது. உயிர்களிடத்து அருள் வேண்டும் எனக் கூறும் அமண் மதக் கொள்கையும் இதனுள் அடங்கும். விரிக்கில் பெருகும்.

இங்ஙனமாகப், புறச்சமயத்தார் எல்லோரும் கண்ட உண்மைகளை ஒப்புக்கொண்டு அவைகள் எல்லாவற்றுக்கும் அப்பாலுமாகிய உண்மைகளையும துருவி ஆராய்ந்து கண்டு அறிந்ததே சைவசமயம் என்பது. கிருஸ்ச்தவம், முகம்ம தீயம், பௌத்தம் முதலிய சமயத்தார் எல்லோரும் தத்தம் மதங்களே வீடு பேற்றுக்கு வழி என்று கூறிப் பிற மதங் களை இகழுவர். சைவமோ அங்ஙனம் இகழாது அவைகளை யும் தழுவிக்கொண்டு தலைமைபெற்று விளங்குகின்றது என்று சிவஞானசித்தியார்,

"அறுவகைச் சமயத்து ஓர்க்கும் அவ் அவர் பொருளாய் வேறுஆம் குறியது உடைத்தாய்" என்று கூறுவதும், அப்பமூர்த்திகள்,

"விரிவுஇலா அறிவினார்கள் வேறுஒரு சமயம் செய்தே
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்றது ஆகும்"

என்று கூறியதும் சிந்திக்கற்பாலன. இனி இரண்டாவது தலைப்பினை ஆராய்வோம்.

## உ. ஆணும் பெண்ணும்

உலகத்தில் காணப்படுகின்ற உயிர்கள் எல்லாம் ஆண் என்றும் பெண் என்றும் இருவகுப்பாகப் பிரித்து உணரப்படுகின்றன. இருப்பன, ஊர்வன, பறப்பன, நடப்பன ஆகிய அனைத்து உயிரும் ஆணும் பெண்ணும் ஆகவே வாழ்கின்றன. எல்லா உயிர்களும் ஆணாக இருந்தாலும் பயனில்லை, பெண்ணாக இருந்தாலும் பயனில்லை. ஆணும் பெண்ணும் ஆகச் சேர்ந்து சேர்ந்து வாழும் வாழ்க்கையிலேயே இன்பமும் பயனும் விளைவன ஆகும். பிள்ளையைத் தருவதும் பிள்ளையைப் பெறுவதும் ஆகிய இவ் ஒரு வேறுபாடு மாத்திரமே ஆணிடத்தும் பெண்ணிடத்தும் அமைந்துள்ளது. இவ்வேறுபாடு இல்லையானால் உலகஉணர்ச்சி இல்லாமற்போவதோடு மிகவிரைவில் உயிர்களின் தோற்றமே அழிந்துபடும். இதுபற்றியே மணிமொழிப் பெருந்தகையாரும்,

"தென்பால் உகந்துஆடும் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காண்ஏடீ
பெண்பால் உகந்திலனேல் பேதாய்! இருநிலத்தோர்
விண்பாலி யோகு எய்தி வீடுவர்காண் சாழலோ."

எனமொழிந்தருளினர்.

உலக வளர்ச்சியில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இருப்பது ஒத்த பொறுப்பே; ஆனாலும், ஆணைக்காட்டிலும் பெண் அடைவதே பெருகிய துன்பம். பிள்ளையைக் கருவில் ஏற்றுப் பத்து மாதங்கள் சுமந்திருப்பது பெண்ணே அன்றோ? பின் அளவிட முடியாத அல்லலை அடைந்து பிள்ளையைப்

பெற்றுப் பேணி வளர்ப்பதும் பெண்ணே அல்லவோ? ஆதலின் உலகவாழ்க்கையில் ஆணைக்காட்டிலும் பெண்ணுக்கே அதிகமான பொறுப்பு உளது என்ற உண்மை இதனால் விளங்குகிறது அல்லவா?

பொறுப்பு மிகுதிஉடைய பெண்ணே குடும்ப வாழ்க்கையில் ஆணைக்காட்டிலும் உரிமை மிகுதி பெறுவதற்கு உரியது என்பது நேர்மையான மதிஉடையார் முடிபாம். அதிக . உரிமை கொடாதுபோயினும் சமஉரிமையாவது பெண்மக்களுக்குத் தரவேண்டுவது அறிஞர் கடமை அல்லவா?

சிவபெருமானுடைய சத்தியைப் பெண்வடிவம் ஆக்கி வழிபடுவது மரபு. சத்திபைச் சிவனிடமிருந்து பிரித்தல் முடியாது. தீயைவிட்டு வெப்பத்தை எப்படிப் பிரிப்பது? சிவஞான சித்தியார் இரண்டாம் சூத்திரத்தில்,

"எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்,"
"சத்திதான் நாதமாதி தானாகும் சிவமும் அந்தச்
சத்திதான் ஆதியாகும் தரும்வடிவு ஆனஎல்லாம்
சத்தியும் சிவமும் ஆகும் சத்திதான் சத்தனுக்கு ஓர்
சத்தியாம் சத்தன் வேண்டிற்று எல்லாம்ஆம் சத்திதானே"

எனக் கூறுவதை நோக்கின் சத்தன் வேண்டிற்று எல்லாம் ஆகும் சத்தியின் பெருமை புலனாகின்றது.

உண்மை இங்ஙனம் ஆகவும் ஒருசார் மதத்தினர் தமது பெண்மணிகளுக்கு முத்திப்பேறு இல்லை என்று கூறி அவரைச் சமய அறிகுறிகூட அணிய விடாது தடா

நிற்பர். அச்சமயத்தினரில் கணவனை இழந்த காரிகை யாரே ஆண் மக்களைப்போலக் குறியீடுகள் அணிந்து வரு கின்றனர். சமணசமயத்தினர் கணவனும் மனைவியும் ஆக வாழும் இல்லற இன்பத்தை மிகவும் இழித்து உரையாடு வர். உலகம் எல்லாம் மங்கை நல்லார் ஆடவரோடு சம உரிமை இல்லாதவராய்த் துன்புறுகின்றனர்; அதுபெற முனைந்து வாதாடியும் வருகின்றனர்.

ஆணும் பெண்ணும் சமஉரிமை பெற்று வாழ்வதற்கு ஏற்ற மருந்து ஒன்று இருக்கிறது. அது காதல் மண வினையே. சைவ நன்மக்களாகிய தமிழரிடைக் காதல் மணவினை ஆகிய கருந்தனம்சிறந்து ஓங்கியிருந்த பண்டைக் காலத்திலே கணவனும் மனைவியும் ஓர் உயிரும் ஈருடலும் போல உளம் ஒருப்பட்ட வாழ்க்கை உடையவராக இருந்த னர். கணவன் தன் மனைவியைத் தன் உயிர்போலஎண்ணிப் பேணுவான். மனைவி தன் கணவனைத்தான் தொழும் தெய் வம் ஆக நினைந்து வழிபடுவாள். ஆண்பெண் என்ற இரு பாலாரும் கற்புடையவராயிருந்தனர். "கற்பு எனப்படுவது சொல்திறம் பாமை" என்பது முதுமகள் வாக்கு. மனைவி சொல்லைக் கணவன் தட்டமாட்டான்; கணவன் ஆணை யை மனைவி மறுக்க மாட்டாள். கணவன் தான் கொண்டு ஒழுகும் சமயத்தில் தன்மனைவியும் புகுதல் இன்றி யமையாதது என எண்ணமல் அப்பெண்மணி தன் அறி விற்கு ஏற்றது எனக்கொள்ளும் சமயத்திலேயே இருக்க வும் இடம் தந்தான் என்றால் வேறு விளம்புவது ஏன்? இதற்குச் சான்றாக ஓர் மெய் வரலாற்றை ஈண்டு எடுத்துக் காட்டுவோம்:

"மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்" எனச் **சேக்கிழாரடிகள்** போற்றிப் புகழும் பாண்டிமா தேவியார் தமது கணவராகிய கூன்பாண்டியர் சமண சமயம் புகுந்த பின்னரும் தாம் சைவராகவே இருந்தார். அவ்வாறு அம்மையார் சைவராக இருப்பதற்கும் மதுரைச்சொக்க நாதனை நாடோறும் சென்று வழிபடுவதற்கும் பாண்டிய மன்னர் இடம் தந்தார். அம்மையாரோடு அமைச்சராகிய குலச்சிறை என்பாரும் சைவராகவே வாழ்ந்தார். இந்த இடத்தில் சேக்கிழாரடிகள் பின்வருமாறு அருளிச் செய்தார்.

"ஆங்குஅவர் தாங்கள் அங்கண் அரும்பெறல் தமிழ்நாடு உற்ற
தீங்கினுக்கு அளவுதேற்றுச் சிந்தையில் பரிவுகொண்டே
ஓங்கிய சைவ வாய்மை ஒழுக்கத்தின் நின்ற தன்மை
பூங்கழல் செழியன் முன்பு புலப்படா வகைகொண்டு உய்த்தார்."

இதனால் மாதேவியாரும் அமைச்சரும் மன்னவருக்குத் தெரியாமல் கள்ளத்தனமாகச் சைவசமயத்தை மேற்கொண்டிருந்தனர் என்பது கருத்தன்று; சைவசமய ஒழுக்கத்தின் நின்ற தன்மையைப் புலப்படுத்தும் குறிகளாகிய திருநீற்றையும் கண்மணியையும் அரசன் முன்பு அவர்கள் அணியாது இருந்தனர் என்பதே இதன் பொருளாம். ஏனென்றால், சமணர்கள் புறச்சமயத்தாரைக் காண்டலும் முட்டு, அவர் வரவைக் கேட்டலும் முட்டு என எண்ணும் தன்மையாக இருந்தனர். அதனால் சமண சமயம் புகுந்த வேந்தருக்குச் சைவசமயக் குறிகளைக்

காண்பது வெறுப்பைத் தந்து உளத்தைப் புண்படுத்தும், உள்ளே மெய் அன்பும் உண்மை ஒழுக்கமும்தான் வீடு பேற்றிற்கு வேண்டப்படுவனவே ஒழியப் புறத்தே காணப்பெறும் குறிகள் அல்ல என்பதை உணர்ந்த மெய் அடியவராகிய பாண்டிமாதேவியார் தமது கணவர் முன்பு அடையாளங்களை அணியாதவராக இருந்ததோடு கோவிலுக்குப்போய் அழகுஅமர் கடவுளை வழிபடும்போதெல்லாம் கணவருடைய ஆணைபெற்றே சென்றார் என்பது தெரியவருகிறது. திருஞான சம்பந்தரது வருகையை அறிந்து எதிர்கொள்ள அம்மையார் சென்றனர் என்று கூறுமிடத்துச் சேக்கிழாரடிகள்,

“அம்புய மலராள் போல்வார் ஆலவாய் அமர்ந்தார் தம்மைக்
கும்பிட வேண்டும் என்று கொற்றவன் தனக்கும் கூறித்
தம்பரி சனங்கள் சூழத் தனித்தடை யோடும் சென்று
நம்பரை வணங்கித் தாமும் நல்வர வேற்று நின்றார்.”

என மொழிந்தருளினார். அம்மையார் திருஞானசம்பந்தருடைய வருகையைத் தம் கணவரிடம் கூறவில்லை. ஏனெனில் அவர் தமது கணவனுருக்குக் கேட்டு முட்டுத்துன்பம் வாராமை கருதி இருத்தல்வேண்டும்.

மங்கையர்க்கரசியார் தமது கணவராகிய நின்றசீர் நெடுமாற நாயனாரைப் போலவே சிவ வழிபாடு தவறாது இயற்றிச் சைவ நன்மக்களுக்கு வழிபடுதெய்வம் ஆகி இறைவன் திருவடி நீழலை எய்தினார். திலகவதியார் திருக்கோவில் தொண்டு இயற்றி இருந்து வீடுபேறு எய்தினார். காரைக்காலம்மையார் தமது கணவருக்குத் தொண்டு செய்து

இருந்ததோடு சிவவழிபாடும் சிறக்கச் செய்து அருள் பெற்று எலும்பு யாக்கையோடு திருக்கயிலையை எய்தும் போது 'என் அம்மை வருகின்றாள்'' என்று சிவபரம் பொருளால் புகழப்பெற்றதோடு அவர் அருகே போன உடன் அவரால் "அம்மையே'' என்னும் செம்மை ஒரு மொழி உலகம் எல்லாம் உய்யவே அருளிச் செய்யப் பெற்ற பெரும்பேறு பெற்று **அற்புதத் திரு அந்தாதியும் திரு இரட்டை மணிமாலையும்** பாடி அறவனார் ஆடும்போது அவர் திருவடிக்கீழ் இருக்கப் பெறும் பேரின்ப வாழ்வை யும் எய்தி உய்ந்தார். சைவம் தழைக்க மேதினியில் தோன்றிய தம்பிரான் தோழரைப் பெற்ற பெருந் தவ மங் கையாம் **இசைஞானியார்** நாடோறும் சிவனார் பூசனை புரிந் திருந்து இன்பப் பெருவாழ்வு எய்தினர். ஆதலின் ஆண் மக்கள் பெருநெறிபற்றிய பெருவாழ்வு பெறுவது போல, எத்தேசமங்கையரும் கைப்பற்றி ஒழுகி அன்பு புரிந்து இறைவன் திருவருளைப் பெறுவதற்கு ஏற்ற நெறியைச் சைவசமயம் கொண்டு திகழ்கின்றது என்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்குகின்றது. இனி, அடுத்த தலைப்பினை ஆராய்வாம்.

## ௯. சாதி வேறுபாடு

உலகில் சாதி வேறுபாடு என்பது காட்டுத் தீயைப் போலப் பரவி அளவற்ற துன்பத்தை விளைத்து வருகிறது. ஒரு நாட்டினர் மற்று ஒரு நாட்டினரை வெறுத்துக் கேடுபுரிய விரும்புகின்றனர். வெள்ளையர் கருப்பர் எனப் பலவித நிற வேறுபாடுகளும் தோன்றி மக்கள் மனத்தில் பகைமையை விளைக்கின்றன. தென்னாப்பிரிக்கா முதலிய இடங்களில் வெள்ளையர் கைவசம் இந்தியர் படும்பாடு யாரே பொறுப்பர்? வெள்ளையர் தாம் வாழும் தெருக்களில் கருப்பராகிய இந்தியர் செல்லுதல் கூடக் கூடாது எனச் சட்டம் விதித்திருக்கின்றனர். என்னே கொடுமை இது?

இக்கொடுமையைக் கேட்கும் இந்தியர் அனைவரும் வெள்ளையர் செய்யும் அடாச்செயல்களுக்காக அவர்களைக் கண்டிக்கின்றனர்; ஆனால் தம்நாட்டில் எவ்வாறு நடக்கின்றனர்? ஆதிதிராவிடர் எனக்கூறப் பெறும் சிலமக்களைத் தாம்வாழும் தெருக்கள் சிலவற்றில் இக்காலத்திலும் கூட வரக் கூடாது என விலக்கி அவர்களைத் துன்புறுத்துகின்றனர். இது முறையா? எனவினவினும் அவர் தமது குற்றத்தை ஒப்பார்.

ஏனைய நாடுகளில் உள்ள மக்கள் சமயவேறுபாட்டைத்தவிர சாதிவேறுபாடு இலராக இருக்கின்றனர். ஆங்கிலேயரை எடுத்துக் கொண்டால் அவர்கள் புரோடெஸ்டண்டுக்கிறிஸ்தவர் எனவும் உரோமன் கத்தோலிக்கர் எனவும் இங்ஙனமாகச் சில சிறு வேறுபாடுகளே உடையர்.

இந்தியாவிலோ கிறிஸ்தவர், முகம்மதியர், இந்தியர்களாகிய இவர்கள் செய்யும் சமயப்போருடன் சாதிப் போர் முனைந்து விளைகின்றது. இந்தியர்களிடை மட்டும் இருந்த சாதிச்சண்டை சாதிவேறுபாடு இல்லை என்னும் கிருஸ்தவர்களையும் பற்றி நெடுங் காலமாக வருத்துகின்றது. உயர்ந்த சாதிக் கிறிஸ்தவர் தாழ்ந்த சாதிக் கிறிஸ்தவருடைய கோவிலுக்கும் போகார் என்னில் அவருடன் ஒற்றுமை ஆகி வேறு என்னதான் செய்வார்?

சைவ நன்மக்கள் சாதி வேறுபாடு என்பதை அறவே ஒழிந்தவர். அவர்கள்,

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" (திருமந்திரம்) என்னும் சிறந்தகொள்கையை உடையவர். "உயிர்களெல்லாம் கடவுளுடைய பிள்ளைகள். அவர் தம்முள் வேறுபாடு யாதும் கிடையாது" என்பதே அறிஞர் துணிபு

"பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்" என்றார் தெய்வப்புலவர்.

"சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்!
கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்தீர்?" எனவும், "பட்டாகில் என்? சாத்திரம் கேட்கில் என்?" என்றும் அருளிய ஆளுடைய அரசர் மேலும் தனித்திருத்தாண்டகத்தில்,

"சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தாணியொடு வான்ஆளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லர் ஆகில்

அங்கம்எலாம் குறைந்துஅழுகு தொழுநோயராய்
ஆஉரித்துத் தின்றுஉழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பர் ஆகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவு ளாரே.”

என்று திருவாய் மலர்ந்து எச்சாதியாரேனும் ‘‘போற்றத் தகுந்தவர் இறைவர் பொன்னடிக்கு அன்பரே” என உண்மையை நிலைநாட்டி அருளினர்.

மணிவாசகப் பெருந்தகையார் திருவாசகத்தில்,

‘‘சாதிகுலம் பிறப்பு என்னும் சுழிப்பட்டுத் தடுமாறும் ஆதமிலி” எனக்கூறித் தமது உளக்கோள் இன்னது என வெளிப்படுத்தி அருளினர். சைவசமய மாபாடியக் காரராகிய சிவஞான முனிவர் கலைசைப் பதிற்றுப்பத்தந் தாதியில் வேதம்கூறும் மெய்ப்பொருள் இது என,

‘‘சிவன் எனும் மொழியைக் கொடிய சண்டாளன்
செப்பிடில் அவனுடன் உறைக
அவனொடும் கலந்து பேசுக அவனோடு அருகிருந்து
உண்ணுக என்னும்
உவமையில் சுருதிப் பொருள்தனை நம்பா ஊமரோடு
உடன் பயில் கொடியோன்
இவன்எனக் கழித்தால் ஐயனே! கதிவேறு எனக்கில்லை
கலைசை ஆண்டகையே!

எனத் திருவாய் மலர்ந்தருளிச் சைவசமயத்தில் சாதிவேறுபாடின்மை வெள்ளிடை விலங்கலே என நிறுவி அருளினர்.

"சாதியிலே, மதங்களிலே, சமயநெறி களிலே,
சாத்திரச் சந்தடிகளிலே, கோத்திரச் சண்டையிலே,
ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்!
அலைந்து அலைந்து வீணே நீர் அலைதல் அழகு
அலவே"

எனச் சாதிமதச் சண்டைகளின் புன்மையைப் புலனுறுத்தியருளினர் வள்ளலார் **இராமலிங்க அடிகளும்.** **கபில** முனிவர் தமது திரு அகவலில் வெளிப்படையாக யாவரும் உணருமாறு,

"முற்படைப் பதனில்வேறு ஆகிய முறைமைபோல்
நால்வகைச் சாதிஇந் நாட்டில் நீர் நாட்டினீர்
மேல்வகை கீழ்வகை விளங்குவது ஒழுக்கால்.
பெற்றமும் எருமையும் பிறப்பினில் வேறே.
பெற்றமும் எருமையும் பேதமாய்த் தோன்றல்போல்
மாந்தரில் பேதம்ஆம் வடிவுஎவர் கண்டுளார்?
வாழ்நாள் உறுப்புமெய் வண்ணமோடு அறிவினில்
வேற்றுமை ஆவதும் வெளிப்படல் இன்றே.

மாரிதான் சில்லோர் வரைந்து பெய்யுமோ?
காற்றும் சிலரை நீக்கி வீசுமோ?
மாநிலம் சுமக்க மாட்டேன் என்னுமோ?
கதிரோன் சிலரைக் காயேன் என்னுமோ?
வாழ் நான்கு சாதிக்கு உணவு நாட்டிலும்
கீழ் நான்கு சாதிக்கு உணவு காட்டிலுமோ?
திருவும் வறுமையும் செய்தவப் பேறும்
சாவதும் வேறுஇலை தரணியோர்க்கே;
குலமும் ஒன்றே குடியும் ஒன்றே

இறப்பும் ஒன்றே பிறப்பும் ஒன்றே
வழிபடு தெய்வமும் ஒன்றே"

என்று குறித்தருளினர்.

இங்ஙனமாகச் சாதிவேறுபாட்டைத்தகர்த்து எறிந்து மக்கள் எல்லாரும் கடவுளுடைய பிள்ளைகளே என்ற ஒற்றுமை உணர்ச்சியைப் பரவச்செய்ய முன் எழுந்த சைவ சமயம் எந் நாட்டினராயினும் தமது நிறவேறுபாடு கருதாமல் தன்னைத் தழுவுவதில் யாதொரு தடையும் இல்லாமல் ஏற்றுக்கொள்கிறது. சைவசமயா சாரியராகிய சுந்தரமூர்த்தி நாயனர் " அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன் "என்றது தமிழ் நாட்டிற்கு அப்பால்உள்ள பிற நாடுகளில் சிவநெறிபற்றி இறைவர் திருவடிப்பேறு நண்ணுவாரை என்க. அப்பாலும் அடிச்சார்ந்தார் யாவர் என்பதை விளக்குவான் புகுந்த நம்பியாண்டார் நம்பிகள் தமது திரு அந்தாதியில்,

" ........... பிறைசூடி தன் பெய்கழற்கே
ஒருக்குமனத் தொடர்பால் அடிச்சார்ந்தவர்என்று உலகில்
தெரிக்கும்அவர் சிவன்பல்கணத்தோர் நம் செழுந்தவரே "

எனவும், அதனையே சேக்கிழார் அடிகள் பெரிய புராணத்தில்,

" மூவேந்தர் தமிழ்வழங்கு நாட்டுக்கு அப்பால்
முதல்வனர் அடிச்சார்ந்த முறைமையோடும்
நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையில் கூறும்
நற்றெண்டர் காலத்து முன்னும் பின்னும்

"பூவேய்ந்த நெடுஞ்சடை மேல்அடம்பு தும்பை
புதியமதி நதிஇதழி பொருந்த வைத்த
சேவேந்து வெல்கொடியான் அடிச்சார்ந் தார்கள்
செப்பியஅப் பாலும்அடிச் சார்ந்தார் தாமே"

என்றும் திருவாய் மலர்ந்தருளியுளர். விண்ணவரும், இந்திரன், நான்முகன் முதலிய தலைவரும் யாவரும் சைவசமயத்தை மேற்கொண்டே வீடு எய்தியவர் ஆவர். இதனைத் தாயுமானப்பெருந்தகையார்,

"விண்ணவர், இந்திரன், பிரமன் நாரதாதி
விளங்கு சத்தரிசிகள் கனவீணை வல்லோர்,
எண்அரிய சித்தர், மனு ஆதி வேந்தர்,
இருக்கு ஆதிமறைமுனிவர் எல்லாம் இந்தக்
கண்அகன் ஞாலம் மதிக்கத்தானே உள்ளங்
கையில் நெல்லிக்கனி போலக் காட்சிஆகத்
திண்ணியநல் அறிவால்இச் சமயத் தன்றோ
செப்பரிய சித்திமுத்தி சேர்ந்தார் என்றும்"

என விரித்துரைத்தனர். ஆகையால் சைவசமயம் உலகினர் அனைவருக்கும் பொதுவாம் செந்நெறி என்ற உண்மை நிலைபெறுமாறு காண்க.

அறுபான் மும்மை நாயன்மாரில் பறையர் வகுப்பிற் சேர்ந்தவர் திருநாளைப்போவார் நாயனார், பாணர் வகுப்பைச் சேர்ந்தவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர்; குயவர் திருநீலகண்ட நாயனார்; அப்பூதியடிகளார் அந்தணர்; திருநாவுக்கரசர் வேளாளர்; ஈழக்குலச் சான்றோர் ஏனாதிநாதனார்; கண்ணப்பர் வேடர். இவர்கள் அனைவரும் யாதொரு வேறுபாடும் இல்லாமலே பழகிவந்தனர். இவர்கள் எல்

லோரும் சிவபெருமானது திருக்கோவிலின் உள்ளே இடம்பெற்று இன்றும் தெய்வங்களாகச் சைவமக்கள் அனைவராலும் வழிபடப்பெறுகின்றனர். அந்தணர் ஆகிய அப்பூதியார் தமக்கு வழிபடு தெய்வமாகக்கொண்டார் வேளாளர் ஆகிய திருநாவுக்கரசரை; அவருடைய திருப்பெயரைத் தாம் எண்ணும் மந்திரமாகவும் கொண்டு தம்முடைய மக்களுக்கும் ஏனைய பொருள்களுக்கும் அதனையே இட்டு வழங்கினார். இதனால் சைவ சமயத்தினுடைய முதன்மையான நோக்கமே சாதி வேறுபாடு முதலிய பிணக்குகளைக் கரு அறுப்பது என்பது தெளிவாக விளங்குகின்றதல்லவா? இனி, சமயநுழைவு என்ற தலைப்பினை ஆராய்வாம்.



## ௬. சமய நுழைவு.

ஒவ்வொரு சமயத்தினரும் தத்தம் சமயங்களில் நுழைவதற்குச் சில செயல்களை விதிக்கின்றனர். கிறிஸ்தவர்கள் ஞானக்குளிப்பு என ஒரு செயலை வைத்திருக்கிறார்கள். முகம்மதியர் சுன்னத்துத் திருமணம் என்பதைப் புரிந்து முகம்மதியர் ஆக்குகின்றனர். இங்ஙனமாகவே சைவ சமயிகளும் தீக்கை என்ற செயலைச் சமய நுழைவுக்கு ஏற்படுத்தியிருக்கின்றார்கள். ஞானக் குளிப்புப் பெறாதவர் கிறிஸ்தவர் ஆகார்; சுன்னத்துப் பெறாதவர் முகம்மதியர் ஆகார். அதுபோலவே சிவதீக்கை பெறாதார் சைவர் ஆகார்.

தீக்கை பலவிதப்படும். "பலவிதம் ஆசான் பாச மோசனம்தான் பண்ணும்" என்று சிவஞான சித்தியார் (8ம். சூ.) கூறும். பலவிதப்பட்ட நிலையினருக்கும் சிவ தீக்கை செய்ய இடம் உண்டு.

"பாலரொடு வாலீசர் விருத்தர் பணிமொழியார்
பல போகத்தவர் வியாதிப் பட்டவர்க்குப்பண்ணும்

சீலமது நிர்ப்பீசம்" என்பது சிவஞானசித்தி எட்டாம் சூத்திரச் செய்யுள். பாலரே ஆயினும் சரி, அன்றிக் கிழவரே ஆயினும் சரி, ஆணே ஆயினும் சரி, அன்றிப் பெண்ணே ஆயினும் சரி, எத்தகைய போகத்தை நுகர்பவர் ஆயினும் சரி, அன்றி நோயாளியரே ஆயினும் சரி அனைவரும் தீக்கை பெற்றுச் சிவநெறி ஒழுகும் அதிகாரம் உடையவரே. அவ் அவர்க்குத் தக்கபடி விதிகளும் அமைந்துள.

தீக்கை ஞானவதி கிரியாவதி என இரு வகைப்படும். கிரியாவதி என்பது குண்டமண்டலங்களிட்டு எரிவளர்த்து சுருக்கு சுருவங்களால் ஆகுதிசெய்து இயற்றப்பெறுவது. இவைகளை மனத்தினால் பாவித்துச் செய்வது ஞானவதி ஆகும். பார்த்தல், தொடுதல் முதலிய செயல்களினாலே யும் தீக்கைகள் அமையும். மணிவாசகப்பெருமானார் இறை வனரிடம் திருப்பெருந்துறையில்பெற்ற தீக்கை பார்வையி னாலேயே அமைந்தது. அவர் அவர் அறிவுநிலைக்கு ஏற்பத் தீக்கைகளும் அமையும்.

தீக்கை என்பது சமய நுழைவு. தொன்று தொட்டு வரும் சைவ நன்மக்களும் தீக்கை பெறுவர்; புறச்சமயத் திலிருந்து சைவம் நுழைவாரும் தீக்கை பெறுதல் வேண் டும். பணத்தை வெறுத்துத் தள்ளிய துறவியருக்குச் செலவில்லாமல் செய்யப்படும் ஞானவதி விதிக்கப்பெற்றது. வறுமை நோயால் வருந்துவோரும் பணச் செலவு இல் லாமலே தீக்கைபெறும் உரிமைஉடையரே.

சைவசமயம் பொதுவாகவே தீக்கையை விதிக்கின் றது. சிறப்பு வகையால் பார்க்கும்போது சைவசமய நுழைவுக்குத் தீக்கையாதி கிரியைகளே வேண்டுவது இல்லை. புறச்சமயம் ஆகிய சமண சமயத்தில் தலைநின்ற வரான திருநாவுக்கரசு நாயனார் இறைவரால் ஆட்கொள் ளும்பொருட்டுக் கொடுக்கப்பெற்ற சூலைநோயால் துன்புறு வார் பொறுக்கல் ஆற்றாது இரவில் ஓடிவந்து தமது தமக் கையாராகிய திலகவதி அம்மையாரைச் சரணம் அடைந் தார். அந்த அம்மையார் அவருக்குத் திருநீறு நெற்றியில் பூசி அழைத்துச் சென்று கோவிலின் உள்ளே நுழைந்து பெருமானாரைக் காட்டினார். அவ்வளவே அவர் பெற்ற

தீக்கை. உடனே அவர் பதிகம்பாடி நோய் நீங்கித் 'திருநாவுக்கரசர்' என்ற பட்டமும் பெற்றுச் சைவ சமய ஆசிரியராக ஆயினார்.

திலகவதியார் கணவனை இழந்து இறைபணி செய்திருந்த அம்மையார். அவரே சமயாசிரியராகிய திருநாவுக்கரசரைச் சைவத்தில் நுழையச் செய்தார். இதனை ஆராயுமிடத்துச் சிறப்புவகையால் சைவசமய நுழைவிற்கு யாதொரு தீக்கையும் விதிக்கப்பெறவில்லை. என்பது விளங்கும். கூன்பாண்டியராக இருந்த நின்றசீர் நெடுமாற நாயனார் என்ன தீக்கை பெற்றுச் சைவர் ஆயினார்? திருஞானசம்பந்தப் பெருமானால் திருநீறு சாத்தப்பெற்ற உடனே அவர் சைவர் ஆகி அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவராக எண்ணப்பெறும் பேறும் பெற்றார்.

புறச்சமய ஒழுக்கங்களைப் பேணி நின்றே அயரா அன்பினால் இறைவனார் திருவடிப் பேற்றுக்கு. இடம்தரும் சைவசமயம் தன்னில் நுழைவதற்குத் தீக்கையை இன்றி அமையாததாக விதிக்கவா செய்யும்? சாக்கிய நாயனார் தாம் புகுந்த சமண சமயத்திற்கு ஏற்ற புற ஒழுக்கங்களை மேற்கொண்டிருந்தே சிவபெருமானுடைய திருவருளைப் பெற்றுப் பேரா இயற்கை எய்தினார்.

இங்ஙனமாகச் சைவசமயம் பலவகைப்பட்ட தீக்கை முறைகளை அவர் அவர் அறிவிற்கும் நிலைமைக்கும் ஏற்ப விதித்தலோடு உலகினர் அனைவரும் உய்யுமாறு கைப்பற்றுவதற்கு ஏற்ற முறையில் புறனடைகளையும் கொண்டு ஒப்பற்று விளங்குகின்றது. இனி, புறவேட நிலையினை ஆராய்வாம்.

## ரு. புறவேடம்.

முகம்மதியம் மொட்டை அடித்தலும் முகமயிர் வளர்த்தலும்ஆகிய புறவேடத்தை விதிக்கிறது. வைணவம் திருநாமம் அணிதலை வெளிவேடமாக உடையது. உரோமன் கத்தோலிக்க மதம் சிலுவை தாங்குதலையும், வீரசைவம் சிவலிங்கத்தை மார்பில் அணிதலையும் விதிக்கின்றன. அங்ஙனமே சைவம் திருநீறு அணிதலையும் கண்மணி பூணுதலையும் புறவேடமாக விதிக்கின்றது. புறவேடம் அந்த அந்த மதத்தினரால் இன்றியமையாததாகவே கருதப்பெறுகிறது.

புறவேடம் ஆதியில் தோன்றியது அவ்அக் கூட்டத்தினர் ஒருவரை ஒருவர் பார்த்த மாத்திரையானே தெரிந்துகொள்ளும் பொருட்டே. அது பிற்காலத்தில் இன்றி அமையாத ஒழுக்கம்ஆக வந்துவிட்டது.

" மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்துவிடின் " என்பது தமிழ் மறைமொழி.

குலச்சிறை ஆகிய அமைச்சரும், மங்கையர்க்கரசியார். ஆகிய பாண்டிமாதேவியாரும் அரசர்முன் வரும்போதுஎல்லாம் திருநீறுகூட அணியாமலே வந்தனர். அவர்கள் இருவரும் அறுபான் மும்மை நாயன்மார் திருக்கூட்டத்தினர் அல்லரோ?

சாக்கிய நாயனார் புறமத ஒழுக்கமே ஒழுக்கு ஆறுகக் கொண்டிருந்தார். அவர் திருநீறும் கண்மணியும் ஒரு நாளும் அணிந்தவர் அல்லர். அவர் தாம் புகுந்த சமண சமயத்தின் கொள்கைகள் முடிந்த நிலையின அல்ல என

ஆராய்ந்து அறிந்து வீடு தருவது சிவனார் திருஅருளே என்பதை உணர்ந்தார். அவர் சிவபெருமானுடைய திரு அருள் பெறுவதற்கு வழியாவது அவருடைய திரு உருவத்தை வழிபடலே என அறிந்து வழிபடுவான் தொடங்கினார். அப்போது அவர் தமது நன்னடைக்கு ஏற்பப் புற வேடத்தையும் மாற்றிக் கொள்ளலாமா என ஆராய்ந்தனர். 'எத்தொழிலைச் செய்தாலும் ஏது அவத்தைப் பட்டாலும் முத்தர் மனம் இருக்கும் மோனத்தே' என்ற உண்மை அவர் நினைவிற்கு வந்தது. அதனால் அவர் சாக்கிய மதவேடத்துடன் நின்றே சிவனார் திரு உருவத்தை வழிபட்டு வந்தார். சேக்கிழார் அடிகள் இந்நிலையில்,

"எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள் என்றே
துன்னியவே டந்தன்னைத் துறவாதே தூயசிவம்
தன்னைமிகும் அன்பினால் மறவாமை தலைநிற்பார்" என அருளுகின்றார்

இதனால், சைவசமயத்திற்கு ஏற்ற புறவேடம் ஆகத் திரு வெண்ணீறு அணிதலும கண்மணியாகிய உருத்திராக்கம் பூணுதலும் இன்றி அமையாதன என்பதும், இருந்தாலும் சைவசமயம் இப்புறவேட அடையாளங்களை அணியாமலே சிவனார் திருவடிக்கு அன்பு செய்வாரையும் விரைந்து ஏற்றுக் கொள்கின்றது என்பதும் இனிது விளங்கும். ஆகையால் சிவநெறி ஒழுக விரும்புவார்க்கு ஏனைய சமயங்களிற்போலப் புறவேடம் தடை ஆவது இல்லை என்ற உண்மை நிலைநாட்டப் பெற்றது. இனி, புலால் மறுத்தலை ஆராய்வாம்.

---

## சா. புலால் மறுத்தல்.

இக்காலத்தில் சைவஉணவு என்பது புலால் இல்லாத உணவு எனப் பொருள்படுகின்றது. சைவர்கள் என்பார் புலால் மறுத்த கூட்டத்தினர். ஆகையால் சைவசமயி களுக்குப் புலால் மறுத்தல் ஓர் இன்றி அமையாத கொள்கை ஆக விளங்குகின்றது.

"தன்ஊன் பெருக்கற்குத் தான் பிறிதுஊன் உண்பான் எங்ஙனம் ஆளும் அருள்?" என்பது தெய்வப் புலவர் திருவாக்கு. புலால் உண்ணுதலாகிய தீயபழக்கம் கொலை என்ற கொடும்பாதகத்திற்கு அடிப்படையாக இருக்கிறது. ஊன் தின்பார், உலகத்தில் இலாமையால் ஊன் பெறும் பொருட்டு ஆடு மாடுகளைக்கொல்லும் தீவினை நின்றுவிடும். ஆதலின் அருள் வள்ளல் ஆகிய திருமூலநாயனர்,

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாரும் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்து வைப்பாரே."

எனத் திருமந்திரத்தில் அருளிச் செய்தார். இராமலிங்க அடிகளும் திருஅருட்பாவில்.

"உயிர்க்கொலையும் புலைப்புசிப்பும் உடையவர்கள் எல்லாம்
உறவினத்தார் அல்லர்; அவர் புற இனத்தார்"

என அருளிச் செய்து உயிர்க்கொலைசெய்து புலால் உண் போரோடு உறவு கலவாமை வேண்டும் என வற்புறுத்து கின்றார் திருவள்ளுவ நாயனர் திருக்குறளில்,

"தன்உயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்உயிர் நீக்கும் வினை" என அருளினார்;

தவம் என்பது தமக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துப் பிறருக்கு உதவி செய்தலும் பிறஉயிர்களுக்கு ஒரு விதமான துன்பமும் செய்யாமையும் ஆம். இங்ஙன மாக எல்லா வகையாலும் அருள் ஒழுக்கத்தை இன்றி அமையாத ஒழுக்கமாகப் போற்றும் தனகமைந்தது சிவ நெறி; இருந்தாலும் இது புலால் உண்ணுவோரைச் சைவ ஒழுக்கினர் அல்லர் என அறவே விலக்கும் தன்மையது அன்று

சைவசமயம் எல்லாவிதமான ஒழுக்க நிலைகளையும் தனக்குப் படிகளாகக் கொள்வதே. இக்காலத்தில் சைவ சமயத்தை மேற்கொண்டு ஒழுகுவோரில் பல்லோர் புலால் உண்போர் ஆகவே இருக்கின்றனர். அறுபான்மும்மை நாயன்மாருள் ஒருவராகிய கண்ணப்ப நாயனார் வேட்டுவ குலத்தினராய்ப் புலால் உண்பவர் ஆகவே இருந்தார். அவர் காட்டுமாக்களைக் கொன்று அவைகளின் புலாலைத் தீயில் வாட்டி இறைவர்க்குத் திருஅமுதாகப் படைத்து மகிழ்ந் தார். அம்மட்டோ? அவர் அப்புலாலை இறைவர்க்கு அமுதாகப் படைக்கு முன்னர் தமது வாயில்போட்டு அதுக்கிச் சுவை பார்த்து அதில் மிகச் சுவை உடையதனை யே கொண்டு சென்று குடுமித்தேவரை உண்பித்தார். கண்ணப்ப நாயனார் அதனைக் குற்றமான செயலாக உணர்ந் தார் அல்லர்; அவர் அன்பில் ஈடுபட்டு அன்பே உருவ மாக விளங்கினர்.

புலாலைத்தவிர வேறு எவ்வகை உணவும் கிடையாத இடங்களும் உலகில் உள. அங்கே வாழும மாந்தர் சிவநெறிப் படர்தற்குப் புலாலை மறுக்கவேண்டுவது இன்றி

அமையாத தாயின் என் செய்யவல்லர்? அதற்காகவே புலால் உண்போரையும் சைவம் ஏற்றுக்கொள்கின்றது. வேதம் கூறும் உயிர்க்கொலை வேள்விகளைச் செய்வாரையும் சைவம் தழுவுவது இது கருதியே.

வேள்விகள் உயிர்க்கொலை வேள்வி எனவும், கொல்லாமற் செய்யும் வேள்வி எனவும் இருவகைப்படும். உயிர்க்கொலை வேள்விகள் சிறு தெய்வ வழிபாடுகளில் செய்யப் பெறுவன. கொல்லா நலத்த வேள்விதான் சிவவேள்வி. கொலை வேள்விகளினால் விளையும்பயன் மிகச்சிறியது; மேலும் விரைவில் அழியும் தன்மையது. சிவவேள்விப் பயனோ அழியா நிலைமையது. அதனாலேயே திருவள்ளுவனார்,

"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று"

என அருளினார். கொலை வேள்வி மேற்கொண்டிருந்தார் சிறுதெய்வ வழிபாடு நீங்கி அறிவு மேம்பாட்டின் பயனாகச் சிவவழிபாடு செய்யப் புகும்போது தாமே சிவவேள்வியின் பயனை உணர்ந்து கொலை வேள்விகளின் நீங்குவர். இனி ஏழாவது ஆகிய வீட்டுநெறியினை ஆராய்வாம்.



# எ. வீட்டு நெறி.

வீட்டு நெறியைக் காட்டி உயிர்களை வாழ்விப்பவர் கடவுளே. "ஒருவனே தேவனும்" என்னும் திருமந்திர வாக்கால் கடவுள் ஒருவரே என்ற முடிந்த நிலையினை உடையது சைவம் என்பது புலனாகிறது.

"சைவத்தின் மேற்சமயம் இல்லை, அதில் சார்சிவம் ஆம் தெய்வத்தின்மேல் தெய்வம் இல்லை" என்ற சித்தாந்தத்தைச் சிவநெறி உடையதேனும் அது சிறுதெய்வ வழிபாடுகளையும் தனக்கு அங்கமாகவே உடையது. சிவபூசையில் கேவலபூசை என்பது அட்டதிக்குப் பாலகர்களுக்கும் திருமாலுக்கும் பூசனை விதிக்கின்றது. அவ்அச் சிறுதெய்வங்களுக்குச் செய்யும் வழிபாடுகளை எல்லாம் இறைவர் ஏற்று அவ்அத் தெய்வங்களாக நின்றே அருள் செய்வார். சிவஞான சித்தியார் இரண்டாம் சூத்திரம்,

"மனமது நினைய வாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல
இனமலர் கையில் கொண்டு அங்கு இச்சித்த தெய்வம் போற்றிச்
சினமுதல் அகற்றிவாழும் செயல் அறமானல் யார்க்கும்
மூனம் ஒரு தெய்வம் எங்கும் செயற்கு முன்னிலையாம் அன்றே" என்றும்,

'யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வம் ஆகி ஆங்கே
மாதொரு பாகனர்தாம் வருவர்; மற்று அத்தெய்வங்கள்
வேதனைப்படும் இறக்கும் பிறக்கும் மேல் வினையும்செய்யும்.
ஆதலால் இவை இலாதான் அறிந்து அருள் செய்வன் அன்றே" எனவும்

கட்டளையிடுகின்றது.

கடவுள் எல்லாப் பொருளுமாய் விளங்குகின்றார்.

"நீர் அவன் தீயினோடு நிழல் அவன் எழிலதாய
பார்அவன் விண்ணின்மிக்க பரம்அவன் பரமயோகி
யார் அவன் அண்டமிக்க திசையினோடு ஒளிகள்ஆகிப்
பார்அகத்து அமுதம் ஆனார் பழனத்து எம்பரமனாரே"

என்பது அப்பர் திருவாக்கு. இவ்வாறாகிய அவர் புறச் சமயக் கடவுளர் ஆகி நின்று அருள் செய்வதற்குத் தடை என்னே?

கடவுளைக் கணவனாக வழிபட்ட ஒருத்தியிடம் அக்கணவனுடைய பெயரை மற்றொருத்தி வினவியதாகவும், அதற்கு அவள் மறுமொழி கூறுவதாகவும் இராமலிங்க அடிகள் மிக அழகாகத் தமது திருவருட்பாவில் பின் வருமாறு பாடுகிறார்:

"பெருகியபேர் அருள்உடையார் அம்பலத்தே நடிக்கும்
பெருந்தகைஎன் கணவர்திருப் பேர்புகல் என்கின்றாய்
அருகர், புத்தர், ஆதிஎன்பேன், அயன்என்பேன், நாரா
யணன்என்பேன், அரன்என்பேன், ஆதிசிவம் என்
பரவுசதா சிவம்என்பேன், சத்திசிவம் என்பேன், [பேன்,
பரம்என்பேன், பிரமம்என்பேன், பரப்பிரமம்என்
(பேன்,
துருவசுத்தப் பிரமம்என்பேன், துரியநிறைவு என்பேன்,
சுத்தசிவம் என்பேன்இவை சித்துவிளையாட்டே."

இதனைச் செவியேற்ற தோழி அப்பெண்மணியிடம் "புறச் சமயக் கடவுளர் பெயரை உன் தலைவர் மீது ஏற்றிக் கூறியது என்னே!" என வினவியதாக வினா எழுப்பிக்கொண்டு அம் மங்கை நல்லாள் மறுமொழி கூறியதாக அவ்அடிகளார்

மேலும் கூறிச்செல்லும் பாடலைப் பாராட்டாதார் அறிவும் ஒரு பொருள் ஆமா? அப்பாடல் வருமாறு:

"சிற்சபையில் நடிக்கின்ற நாயகனார் தமக்குச்
சேர்ந்தபுறச் சமயப்பேர் பொருந்துவதோ? என்றாய்.
பிற்சமயத்தார் பெயரும் அவர் பெயரே கண்டாய்.
பித்தர்என்றே பேர்படைத்தார்க்கு எப்பெயர்
ஒவ்வாதோ?
அச்சமயத் தேவர்மட்டோ? நின்பெயர் என்பெயரும்
அவர் பெயரே. எவ்வுயிரின் பெயரும்அவர் பெயரே.
சிற்சபையில் என்கணவர் செய்யும் ஒரு ஞானத்
திருக்கூத்துக் கண்டளவே தெளியும்இது தோழீ!"

எங்கும் நிறைந்த கடவுளுக்கு எல்லாம் கடந்த பொருள் எனப்பொருள்படும் கடவுள் என்ற பெயர் மிகப்பொருந்துவதே. அவருக்கு ஓர் உருவம் இல்லை, பெயரும் இல்லை. அத்தகையினருக்கு நாம் எண் அற்ற பெயர்களைக் கற்பிக்கின்றோம். மணிவாசகனார்,

"ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" எனக்கூறுகின்றார். கடவுளுடைய நிலையை அவருடைய அருளே கண் ஆகக் கண்டால்தான் காணமுடியும். இதனையே அப்பமூர்த்திகளும் திருவினைத் திருத்தாண்டகத்தில்,

'மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னின் அல்லால்

ஒப்புஉடையன் அல்லன் ஒருவன் அல்லன்
ஓர் ஊரன் அல்லன்ஓர் உவமன் இல்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
அவன்அருளே கண்ஆகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்று எழுதிக் காட்டொணாதே"

என விரிவாக விளக்கி அருளினார்.

பண்டைக் காலத்தில் சைவநன்மக்கள் "ஒரு சமயத்தினர் வழிபடும் தெய்வத்தை மற்றொருவர் வழிபடுவது இல்லை. தெய்வத்திற்கு ஒருவர்கூறும் குணங்களை மற்றொருவர் ஒப்புவது இல்லை" என்பதை நன்கு அறிந்து இன்ன உரு எனக் கூறல்ஆற்றாத சிவலிங்கவடிவினை வெளியில் நிற்கும் ஏதாவது ஒரு மரத்தடியில் நிறுத்தி வழிபடுவார் ஆயினர். சிதம்பரத்தில் தில்லைமரமும், மதுரையில் கடம்பமரமும், திருநெல்வேலியில் மூங்கில்மரமும், திருஇடைமருதூரில் மருதமரமும் கொள்ளப்பெற்றன. அதனாலேயே திருக்கோவில் அம்பலம் எனப்பெற்றது இறைவர் ஐந்தொழில் நடத்தும் அறிகுறியை வெளியிடும் பொருட்டுக் கூத்துவடிவினர் ஆக்கப்பட்டு அம்பலவாணன் எனப்பெயர் பெற்றார். சிதம்பரத்தில் அவ்அம்பலவாணர் திருஉருவ வழிபாட்டுடன் சிதம்பர இரகசிய வழிபாடும் நடைபெறுகிறது. சிதம்பர இரகசியம் ஆவது வெட்ட வெளியே அங்கே இருப்பது ஒரு பொருளும் இல்லை. இங்ஙனம் ஆகிய வழிபாடு யாவர்க்கும் ஏற்றதே. இதனைத் தாயுமான அடிகள் தமது திருப்பாடலில்,

" சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு
சமயசங்கே தப்பொருளும் தான்ஒன்றாகப்
பன்மார்க்க நெறியினிலும் கண்டது இல்லை;
பகர்வுஅரிய தில்லைமன்றுள் பார்த்தபோது அங்கு
என்மார்க்கம் இருக்குது எல்லாம் வெளியே என்ன
எச்சமயத் தவர்களும் வந்து இறைஞ்சா நிற்பர்"

என எடுத்துக்காட்டித் தனிப்பெருஞ்சமயம் ஆம் சிவ நெறிப் பெருமையினைப் புகழ்ந்தருள்கின்றார். இங்ஙனம் ஆகிய உயர் தனி வழிபாட்டு முறைமையினாலும் சைவ சமயம் உலகசமயம் ஆவது பெற்றாம்.

கிறிஸ்தவர் தம்முள் கத்தோலிக்கர் எனவும் புரோடஸ்டாண்டியர்எனவும் பிளவுபட்டு வெவ்வேறுவிதமான கொள்கைஉடைவராய் இருக்கின்றார்கள். அவர்கள் கடவுள், உயிர்கள், ஏசுகிறிஸ்துநாதர்ஆகிய மகன் என்ற முப்பொருள்களை உடன்பட்டுக் கடவுளிடத்திலிருந்து பிரிந்து வந்த உயிர்கள் கடவுளைக் கூடும் வழியைக் காட்டுவதே தமது சமயம் என்பர் அவர்களுக்குள் இடால்சுடாய் போன்ற சில பேரறிஞர் நடுநிற்போர் ஆகிய ஏசுநாதரை உடன்படார்.

கிறிஸ்தவரினும் சற்றுவிரிந்த கொள்கைகளை உடையவர் ஆகிய முகம்மதியர் தமது சமயத் தலைவராகிய முகம்மது நபிநாயகத்தை ஓர் ஒப்பற்ற பெரியார் எனவே கூறுகின்றனர். கிறிஸ்தவரும், முகம்மதியரும் தம்மைத் தவிர ஏனைய சமயத்தவர் எல்லோரும் நரகக்குழியிலே விழுந்து மீளாமல் அழுந்துவர் எனக்கூறி மகிழ்கின்றனர். இதனையே,

"சமய வாதிகள் தத்தம் மதங்களில்
அமைவதுஆக அரற்றி மலைந்தனர்" என்றும்,
"புத்தன் முதலாய புல் அறிவில் பல்சமயம்
தத்தம் மதங்களில் தட்டுளுப்புப் பட்டுநிற்க"

எனவும் மணிமொழித் தேவர் கூறியருளினார். சைவ சமயமோ இங்ஙனம் கூறாது ஏனைய சமயத்தினர் எல்லாரும் தத்தம் மதங்களில் நின்று படிஏறி வந்து சிவ வழிபாடு செய்து முத்திப்பேறு எய்துவர் என்று யாவரையும் தழுவிக்கொள்கின்றது.

சிவநெறி மக்களின் அறிவு வேறுபாட்டிற்கு ஏற்பச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என வழிபடு நிலைகளை வகுத்து அவ் அந்நிலைகளுக்கு ஏற்றபடி கடவுள் உலகம் அடைதல், அருகு இருத்தல், ஒத்தஉரு அடைதல், ஒன்றுதல் எனப்பெறும் பயன்களையும் கூறுகின்றது. எந்நெறியில் நின்று வழிபாடு புரிந்தாலும் ஞானம்பெற்று அல்லாமல் இறைவரோடு ஒன்றுதல் ஆகிய பேரின்ப நிலை எய்துதல் அரிது ஆம்.

ஞானமே வீடுதருவது என்பதை மாபாடியம் சிவ ஞான முனிவர் சிவஞான சித்தியார் எட்டாம் சூத்திரம் "ஞானத்தால்வீடு என்றே" எனத்தொடங்கும் பாடலுக்கு உரை வகுக்கும்போது "வீடுபேற்றிற்கு ஞானம் ஒன்றே சிறந்த காரணம் ஆவது என்பது வேத முதலிய பிரமாண நூல்கட்கெல்லாம் துணிபாகவும், அவற்றோடு பிணங்கி வீடு பேற்றிற்குத் தீக்கை மாத்திரையே அமையும், ஐவகை வேள்வி முதலிய கன்மங்களே அமையும், பத்திநெறி மாத்திரையே அமையும் என்று இவ்வாறு பிதற்றும் பேதைநீரார்

ஓர் ஆற்றாலும் தெருட்டற்பாலர் அல்லர் எனவும், ஞானம் அல்லாதன எல்லாம் அஞ்ஞானம் ஆகலின் அவ்அஞ்ஞானப் பகுதிகளால் பந்தம் உறுதல் இன்றி வீடுபேறு அடைதல் கூடாது எனவும், அவ்அஞ்ஞானப் பகுதிகள் எல்லாம் ஒளிமுன் இருள்போல ஞானத்தின் முன்னர்ச் சத்திகெட்டு ஒழியும், அவை ஒழியவே அவற்றான் ஆய பந்தம் நீங்கும், அது நீங்கவே முத்திநிலை கைகூடும் ஆகலான் ஞானம் ஒன்றே முத்திக்குச் சிறந்த காரணம் எனவும், ஞானத்துள்ளும் தார்க்கிகர் சாங்கியர் மாயாவாதி முதலியோர் கூறும் ஞானங்கள் எல்லாம் பாசஞான பசுஞானங்கள் ஆகலான் அவையும் பந்தம் உறுத்துவனவே அன்றி வீடு எய்துவிக்க மாட்டாமையின் அவற்றின் வேறாய திருவடிஞானம் ஒன்றே அப்பெற்றித்தாகிய ஞானமாவது எனவும் கூறுவர் அந்நூல்களின் உண்மைஉணர்ந்தோர்'' என விரிவாக விளக்கி அருளினார்.

சைவநெறி கடவுள் வழிபாட்டைப் பூவும் நீரும் கொண்டு செய்யவேண்டும் எனக்கூறுகின்றது. பிற சமயத்தார் எல்லாரும் தமது தெய்வ வழிபாட்டிற்கு நறுமணமலர் தேடச் சிவவழிபாட்டினர் தமது கடவுள் வழிபாட்டிற்கு ஏற்றதாக ஒருவரும் விரும்பாத எருக்கமலர், தும்பை மலர், ஊமத்தமலர் முதலியனவே தேடுகின்றனர். ஏழை மக்களும் எளிதாக வழிபாடு புரிவதற்காகவே இங்ஙனம் விலைபெறா மலர்கள் சிவபூசனைக்கு விதிக்கப்பெற்றன போலும்! என்னே சிவநெறியின் மாண்பு!!

மலர்கள் கிடையாத இடத்து இலைகளால் வழிபடலாம். அதுவும் கிடையாதபோது மனத்தினால் இனமலர் கொண்டு அருச்சித்தல் ஒப்பற்ற பூசனையாகி இறைவரால் ஏற்றருளப்பெறும்.

பூசனையில் வெளிப்பாவனைகள் சிறந்தன அல்ல; அன்பே சிறந்தது அன்பு அற்ற பூசை பூசை ஆகாது. சிவனார் அன்பே உருவாக இருக்கிறார். அவருடைய அருளே சக்தி. திருமூல நாயனார் திருமந்திரத்தில்,

"அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவம்ஆவது யாரும் அறிகிலார்
அன்பே சிவம்ஆவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே"

என மொழிந்தருளுகிறார். புறச்சமயத்தில்இருந்தே சிவ வழிபாடு செய்த சாக்கிய நாயனார் கல்லை மலராக எறிந்து வழிபட்டார். அது அன்பால் செய்யப்பட்டது ஆதலின் அதனை ஒப்பற்ற பூசையாகச் சிவனார் ஏற்றருளினார். இதனைச் சேக்கிழார் பெருமான்,

"கல்லாலே எறிந்ததுவும் அன்பான படிகாணில்
வில்வேடர் செருப்படியும் திருமுடியின் மேவிற்றால்
நல்லார் மற்றவர் செய்கை அன்பாலே நயந்ததனை
அல்லாதார் கல்என்பர் அரனார்க்கு அஃது அலர் ஆமால்" என விளக்கியருளினார்.

# முடிவுரை

இங்ஙனம் ஆக, எல்லா வகையாலும் ஏனைய சமயங்களையெல்லாம் தனக்கு அங்கம் ஆகக் கொண்டு அவ்அவர் கூறும் உண்மைகளை எல்லாம் ஏற்றுக்கொண்டு அவைகளுக்கு அப்பால் ஆகிய மெய்ம்மைகளை உடையதாய் எவ்வகைப்பட்ட வேற்றுமைகளையும் ஒழித்து ஒருமைப்பாட்டுடன் உலகினர் அனைவரும் ஒரு தாய்வயிற்றுப்பிள்ளைகள் போல வாழ்வதற்கு அன்புநெறி காட்டுவதாய் அரசாங்கத்து அமர்ந்து திகழ்கின்றது உலக சமயம் ஆம் சைவ சித்தாந்தம் இதனையே திருமந்திரம்,

"சைவப் பெருமைத் தனிநாயகன் நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்று உண்டு
தெய்வச் சிவநெறிச் சன்மார்க்கம் சேர்ந்து உய்ய
வையத்துளார்க்கு வகுத்து வைத்தானே"

என மொழிகின்றது. சைவத்தின் உண்மைகளை உலகினர் அறிந்து கைக்கொள்ளுவரேல் அவர் தம்முள் நிகழும் சாதிப்போர், சமயப்போர், நாட்டுப்போர் எல்லாம் நீங்கி நல்வாழ்வு அடைவர்.

கி. பி 1929 மார்ச்சுமீ 29, 30, 31ம் நாட்களில் திருநெல்வேலியில் கணபதி விலாசக் கொட்டகையில் கூடிய சைவப்பெரியார் தனிக்கூட்டத்திலும், அடுத்துத் திருப்பாதிரிப்புலியூரில் 16-5-1929 முதல் ஆறுநாட்கள் சைவ சித்தாந்த மாசமாசத்தினர் ஆதரவில் திருப்பாதிரிப்புலியூர் அருட்டிரு ஞானியார் அடிகளை வரவேற்புத்தலைவர் ஆகவும் அருட்டிரு மறைமலை அடிகளைத் தலைவர் ஆகவும் கொண்டு நடைபெற்ற சைவப்பெரியார் மா நாட்டிலும்

நிறைவேறிய முடிபுகள் சைவ சமயம் உலக சமயம் ஆவதற்கு ஏற்ற முடிபுகளை உடையது என்பதை நிலைநாட்டுவன. அவைகளைக் கீழே குறித்து இக்கட்டுரையை முடிப்பாம். அத்தீர்மானங்கள் பின்வருமாறு: —

1. சைவசமயிகள் கடவுள் உண்டு என்னும் கொள்கையைப் பாதுகாப்பதிலும் அக்கொள்கை உடையாராய்ப் பொதுநலம் கருதிய அருள் ஒழுக்கத்தைப் பாதுகாப்பதிலும், தம்மோடு இணங்கிவரும் ஏனைச் சமயிகளோடு ஒத்து உழைத்தல்வேண்டும்.

2. சைவசமயமானது பிற சமயங்களைச் சோபான முறையில் தழுவுவதால், சைவசமயிகள் பிற சமயிகளோடு சகோதரத்துவம் பாராட்டல்வேண்டும்.

3 சைவசமயிகளுள் சைவ ஆசாரமுடைய எம்மரபினர்க்கும் ஆலயவழிபாடு முதலிய சமய உரிமைகள் சமமாயிருத்தல்வேண்டும்.

4. ஆலயத்தில்சென்று வழிபடும் மக்கட்குக்கடவுள் திருமுன்பு எவ்வகையான உயர்வுதாழ்வுகளும் பாராட்டப் படுதல் கூடாது.

5. பிறசமயத்தினர் சைவசமயக் கோட்பாடுகளையும் அனுட்டானங்களையும் ஒப்புக்கொண்டு சைவசமயம் புகும் தமது விருப்பத்தை ஒரு சைவ சபையாருக்கு எழுத்து மூலமாகத் தெரிவித்தால், அச்சைவசபையார் அவ் அறிவிப்பைப் பதிவுசெய்துகொண்டு திருநீற்றுப்பதிகத்தையும் பஞ்சாக்கரப் பதிகத்தையும் ஓதுவித்துத் திருநீறு அணி

வித்து அவர்களைச் சைவசமயத்தில் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும். அவர்கள் சமய உரிமைகள் அனைத்துக்கும் உரியர் ஆவார்கள்.

உலகம் எங்கும் பல இடங்களில் சிவலிங்கங்கள் காணப்பெறுகின்றன. பாபிலோனில் 1200 அடி உயரமுள்ள சிவலிங்கமும், ஐடிரோபோல்சு என்ற பட்டினத்தில் 600 அடி உயரமுள்ள சிவலிங்கமும் கண்டெடுக்கப் பட்டுள்ளன. அலெக்சாந்திரியாவில் தாலமி நடத்திய விழாவில் 129 முழ உயரமுள்ள சிவலிங்கம் வீதிவலம் கொண்டு செல்லப்பெற்றது; கிரீசிலும் அங்ஙனமே நடைபெற்றது. சாப்ரித்து நகரில் பார்வதி கோவிலும், கிளாசுக்கோவில் பொன் தகட்டால் மூடப்பெற்ற சிவலிங்கம் ஒன்றும் காணப்பெறுகின்றன. கத்தோலிக்க குரு பீடமாகிய உரோமில் கிருத்தவக் கோவிற் கட்டிடங்களில் சிவலிங்க வடிவங்களை இன்றும் காணலாம். அயர்லாந்திலும் இங்கிலாந்திலும் கோவில்கள் பலவற்றுள் சிவக்குறி உருவங்கள் உள்ளன. அரேபியரும், யூதரும், பௌத்தரும் சிவலிங்க வழிபாட்டினரே. அசோகர் காஞ்சியிற் கட்டிய புத்தக்கோவிலில் இலிங்கங்கள் வைத்து வழிபடப்பெற்றன. சீயம், சாவகம், மலாயா, கம்போதியா, மெக்சிகோ முதலிய நாடுகளில் சிவலிங்க வழிபாடு நடைபெறுகிறது. இதனால் உலகம் எங்கும் ஒரு காலத்தில் சிவநெறி பரவி இருந்திருக்கவேண்டும் என்பது ஊகிக்கப் பெறுகிறது.

இயற்கையிலேயே அமையும் உருவம் சிவலிங்க வடிவமே. நாம்வாழும் பூமி, விண்மீன்கள், கோள்கள்

நீர்க்குமிழிகள், உயிர்கள் வாழும் உடலங்களின் தலைகள், மொட்டுக்கள், பூக்கள் எல்லாம் சிவலிங்க வடிவமே. மலைச் சிகரங்கள் யாவும் சிவலிங்கமே; இமயமலை உச்சியாகிய கைலாசம் இயற்கையாக அமைந்த மிகப்பெரிய சிவலிங்கம். அதனாலேயே அது இன்றும் மக்கள் அனைவராலும் போற்றப்பெறுகின்றது. உலகம் எங்கணும் உலகப் பொதுச்சமயமாகிய சிவநெறி தழைத்து ஓங்குவதாக!

"வாழ்க அந்தணர், வானவர், ஆன் இனம்;
வீழ்க தண்புனல்; வேந்தனும் ஓங்குக;
ஆழ்க தீயது எல்லாம்; அரன் நாமமே
சூழ்க; வையகமும் துயர் தீர்கவே." (சம்பந்தர்)

"சைவ சமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளி காட்டும் இந்தக்
கருத்தைவிட்டுப்
பொய் வந்துழலும் சமய நெறி புகுத வேண்டாம்;
முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்கே சேரவாரும்
செகத்தீரே!"
(தாயுமானவர்)

# புகழ்மாலை

மனம்எனுந் தோணிபற்றி மதிஎனுங் கோலைஊன்றிச்
சினம்எனும் சரக்கை ஏற்றிச் செறிகடல்ஓடும்போது
மதன்எனும் பாறைதாக்கி மறியும்போது அறியஒண்ணாது
உனைஉனும் உணர்வை நல்காய் ஒற்றியூர்உடைய கோவே.

ஞானத்தால் தொழுவார்சில ஞானிகள்
ஞானத்தால் தொழுவேன்உனை நானலேன்
ஞானத்தால் தொழுவார்கள் தொழக்கண்டு
ஞானத்தாய்உனை நானும் தொழுவேனே.

கற்றுக் கொள்வன வாய்உள நாஉள
இட்டுக் கொள்வன பூஉள நீர்உள
கற்றைச்செஞ் சடையான்உளன் நாம்உளோம்
எற்றுக் கோநமனால்முனிவு உண்பதே

மனிதர் காள்இங்கே வம்ஒன்று சொல்லுகேன்
கனி தந்தால்கனி உண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல் ஈசன்எனும் கனி
இனிது சாலவும் ஏசற்ற வர்கட்கே.

என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான்
தன்னை நானும்முன் ஏதும் அறிந்திலேன்
என்னைத் தன்அடியான் என்றுஅறி தலும்
தன்னை நானும் பிரான்என்று அறிந்தேனே.

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நான்அறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின்று ஏத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

பூக்கைக் கொண்டு அரன் பொன்அடி போற்றிலார்
நாக்கைக் கொண்டு அரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேஇரை தேடி அலமந்து
காக்கைக் கேஇரை ஆகிக் கழிவரே.

விறகில் தீயினன் பாலில் படு நெய்போல்
மறைய நின்றுளான் மாமணிச் சோதியான்
உறவு கோல் நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே

சாத்திரப்பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்
பாத்திரம்சிவம் என்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருளும் மாற்பேறரே

இருந்துசொல்லுவன் கேண்மின்கள் ஏழைகாள்
அருந்தவம்தரும் அஞ்செழுத்து ஓதினால்
பொருந்துநோய்பிணி போகத்துரப்பது ஓர்
மருந்தும் ஆகுவர் மன்னும் மாற்பேறரே.

ஈட்டும் மாநிதி சால இழக்கினும்
வீட்டும்காலன் விரைய அழைக்கினும்
காட்டில் மாநடம் ஆடுவாய் காஎனில்
வாட்டம்தீர்க்கவும் வல்லர் மாற்பேறரே.

ஞானம் காட்டுவர் நன்னெறி காட்டுவர்
தானம் காட்டுவர் தம்அடைந்தார்க்குஎலாம்
தானம் காட்டித்தன் தாள்அடைந்தார்கட்கு
வானம் காட்டுவர் போல் வன்னிஊரரே.

குணங்கள் சொல்லியும் குற்றங்கள் பேசியும்
வணங்கி வாழ்த்துவர் அன்புடையார் எலாம்
வணங்கி வான்மலர் கொண்டுஅடி வைகலும்
கணங்கள் போற்றிசைக் கும்கரக் கோயிலே.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்குஇள வேனிலும்
மூசு வண்டுஅறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணைஅடி நீழலே.

மெய்ம்மைஆம் உழவைச்செய்து விருப்பு எனும்வித்தைவித்திப்
பொய்மைஆம் களையைவாங்கிப் பொறைஎனும் நீரைப்
தம்மையும் நோக்கிக்கண்டு தகவுஎனும் வேலிஇட்டுச்[பாய்ச்சித்
செம்மையுள் நிற்பாராகில் சிவகதி விளையும்அன்றே

காயமே கோயில்ஆகக் கடிமனம் அடிமைஆக
வாய்மையே தூய்மைஆக மனமணி இலிங்கம்ஆக
நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமையஆட்டிப்
பூசனை ஈசனுர்க்குப் போற்றவிக் காட்டினோமே.

குலங்கள் என்செய்வ குற்றங்கள் என்செய்வ
துலங்கி நீ நின்று சோர்ந்திடல் நெஞ்சமே
இலங்கு சேறையில் செந்நெறி மேவிய
அலங்கனார்உளர் அஞ்சுவது என்னுக்கே.

பண்ணில் ஓசை பழத்தினில் இன்சுவை
பெண்ணொடு ஆண்என்று பேசற்கு அரியவன்
வண்ணம்இல்லி வடிவுவேறுஆயவன்
கண்ணில் உண்மணி கச்சிஏ கம்பனே.

நாம் ஆர்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணி அறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை
தாம்ஆர்க்கும் குடி அல்லாத் தன்மை ஆன சங்கரன்
நல் சங்கவெண் குழையோர் காதில்
கோமாற்கே நாம என்றும் மீளா ஆளாய்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே.

நாடகத்தால் உன்அடியார் போல் நடித்து நான் நடுவே
வீடு அகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கு என்
ஊடகத்தே நின்று உருகத் தந்தருள் எம் உடையானே.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆர்அமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந் தருளுவது இனியே.

பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ஒளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே.

# திருமந்திரம்.

---

தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருள்அறி வார்இல்லை
சேயினும் நல்லன் நணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன்நல் தாழ்சடை யோனே. 1

பயன்அறிந்து அவ்வழி எண்ணும் அளவில்
அயனொடு மால்நமக்கு அன்னியம் இல்லை
நயனங்கள் மூன்றுடை நந்தித் தமர்ஆம்
வயன்பெறு வீர்அவ் வானவ ராலே. 2

ஊர்எலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணம்என்று பேர்இட்டுச்
சூரை அம் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பு ஒழிந்தார்களே. 3

அவ்வியம் பேசி அறம்கெட நில்லன்மின்
வெவ்வியன் ஆகிப் பிறர்பொருள் வவ்வன்மின்
செவ்வியர் ஆகிச் சிறந்துஉண்ணும் போதுஒரு
தவ்விக்கொடு உண்மின் தலைப்பட்ட போதே. 4

ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறும் காளையர்
காய்ச்ச பலாவின் கனிஉண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக்கு இடர்உற்ற ஆறே. 5

நூலும் சிகையும் நுவலில் பிரமமோ?
நூலது கார்ப்பாசம் நுண்சிகை கேசம்ஆம்
நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானம்ஆம்
நூலுடை அந்தணர் காண நுவலிலே. 6

மறையோர் அவரே மறையவர் ஆனால்
மறையோர்தம் வேதாந்த வாய்மையில் தூய்மை
குறைஓர்தல் மற்றுள்ள கோலா கலம்என்று
அறிவோர் மறைதெரித்த அந்தணர் ஆமே. 7

யாவர்க்கும் ஆம் இறை வற்குஒரு பச்சிலை
யாவர்க்கும் ஆம்பசு வுக்குஒரு வாய்உறை
யாவர்க்கும் ஆம்உண்ணும் போதுஒரு கைப்பிடி
யாவர்க்கும் ஆம்பிறர்க்கு இன்உரை தானே. 8

இன்பம் இடர்என்று இரண்டுஉற வைத்தது
முன்புஅவர் செய்கையி னாலே முடிந்தது
இன்பம் அதுகண்டும் ஈகிலாப் பேதைகள்
அன்புஇலார் சிந்தை அறம் அறியாரே. 9

அன்பும் சிவமும் இரண்டுஎன்பர் அறிவிலார்
அன்பே சிவம்ஆவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவம்ஆவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. 10

என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போடு உருகி அகம்குழை வார்க்குஅன்றி
என்பொன் மணியினை எய்தஒண் ணாதே. 11

கண்டேன் கமழ்தரு கொன்றையி னான்அடி
கண்டேன் கரிஉரி யான்தன் கழல்இணை
கண்டேன் கமல மலர்உறை வான்அடி
கண்டேன் கழலதுஎன் அன்பினுள் யானே. 12

கற்றும் சிவஞானம் இல்லாக் கலதிகள்
சுற்றமும் வீடார் துரிசுஅறார் மூடர்கள்
மற்றும் பலதிசை காணார் மதியிலோர்
கற்று அன்பின் நிற்போர் கணக்குஅறிந் தார்களே. 13

அன்பும் அறிவும் அடக்கமும் ஆய்நிற்கும்
இன்பமும் இன்பக் கலவியும் ஆய்நிற்கும்
முன்புஉறு காலமும் ஊழியும் ஆய்நிற்கும்
அன்புஉற ஐந்தின் அமர்ந்துநின் றானே. 14

உள்ளத்து ஒருவனை உள்உறு சோதியை
உள்ளம்விட்டு ஓர்அடி நீங்கா ஒருவனை
உள்ளமும் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருஅறி யாதே. 15

உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்துநின்று ஆடார் வினைகெட
பள்ளமும் மேடும் பரந்து திரிவரேல்
கள்ள மனம்உடைக் கல்விஇல் லோரே. 16

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தம் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டு ஒன்றில் மாய்ந்திடும்
சத்தியம் ஈது சதா நந்தி ஆணையே 17

ஆண்டான் அடியவர் ஆர்க்கும் விரோதிகள்
ஆண்டான் அடியவர் ஐயம் ஏற்று உண்பவர்
ஆண்டான் அடியாரை வேண்டாது பேசினோர்
தாம்தாம் விழுவது தாழ்வாம் நரகமே. 18

எண்ணாயிரத்தாண்டு யோகம் இருக்கினும்
கண்ணார் அமுதினைக் கண்டுஅறி வார்இல்லை
உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கிடில்
கண்ணாடி போலே கலந்துஇருந் தானே. 19

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே 20

உடம்பினை முன்னம் இழுக்கு என்று இருந்தேன்
உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோவில்கொண் டான்என்
உடம்பினை யான் இருந்து ஓம்புகின் றேனே. 21

அஞ்சுஎழுத்தால் ஐந்து பூதம் படைத்தனன்
அஞ்சுஎழுத்தால் பல யோனி படைத்தனன்
அஞ்சுஎழுத்தால் இவ் அகல்இடம் தாங்கினன்
அஞ்சுஎழுத்தாலே அமர்ந்து நின்றானே. 22

அன்புடனே நின்று அமுதமும் ஏற்றியே
பொன் செய் விளக்கும் புகைதீபம் திசைதொறும்
துன்பம் அகற்றித் தொழுவோர் நினையுங்கால்
இன்ப முடனேவந்து எய்திடும் முத்தியே. 23

எந்தை பிரானுக்கு இருமூன்று வட்டமாய்த்
தந்தைதன் முன்னே சண்முகம் தோன்றலால்
கந்தன் சுவாமி கலந்து அங்கு இருத்தலால்
மைந்தன் இவன் என்ன மாட்டிக்கொளீரே. 24

படமாடக் கோவில் பகவற்கு ஒன்று ஈயின்
நடமாடக் கோவில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடக் கோவில் நம்பர்க்கு ஒன்று ஈயின்
படமாடக் கோவில் பகவற்கு அது ஆமே. 25

கண்காணி ஆகவே கைஅகத்தே எழும்
கண்காணி ஆகக் கருத்துள் இருந்திடும்
கண்காணி ஆகக் கலந்து வழிசெய்யும்
கண்காணி ஆகிய காதலன் தானே. 26

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன்இல்லை நாணுமே
சென்றே புகும்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்ம்மினே. 27



கணேசன் அச்சுக்கூடம், திருநெல்வேலிச் சந்திப்பு. படிகள் 300